# பாரதமணி


ஆசிரியர் :
கா. சி. வேங்கடரமணி

காரியாலயம் :
295, லிங்க செட்டி தெரு, மதராஸ்.

வருஷ சந்தா ரூ. 4.

| மாலை 4 | ஞாயிறு 26-5-40 விக்ரம ஸ்ரீ வைகாசிமீ 13உ | முத்து 8 |
|---|---|---|


## பொருள் அடக்கம்


| விஷயம் | | பக்கம் |
|---|---|---|
| உலக வர்த்தமானம் ... ... ... ... | | 194 |
| தமிழ்நாட்டுச் செய்திகள் ... ... ... ... | | 196 |
| போகிற போக்கில் ... ... ... ... | | 197 |
| அதிகப்பிரஸங்கம் ... ... ... ... | | 199 |
| உதிர்ந்த மணிகள் ... ... ... ... | | 201 |
| நாம் பறித்த புஷ்பங்கள் ... ... ... ... | | 202 |
| மேகத் தூது ... ... ... | "சொக்கன்" | 204 |
| ஹார்மோனிய பகிஷ்காரம் ... | ஏ. என். கல்யாணசுந்தரம் எம். ஏ. | 206 |
| கொடூர தண்டனை ... ... ... | சு. ரா. ஆதிமூலம் | 211 |
| சிறுவர் பகுதி ... ... | பார்வதி சுப்ரமண்யம் | 214 |
| ஸ்வேதாரண்ய ஆசிரம பால பாடம் (2) ... ... | கா. சி. வேங்கடரமணி | 216 |


"பாரத மணி" யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயாகள் எல்லாம் கற்பனைப் பெயர்கள் ; ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.



# உலக வர்த்தமானம்

சர்ச்சில் மந்திரி சபை வெகு விமரிசையாக யுத்தத்தை நடத்தி வருகிறது என்று எங்கும் பத்திரிகைகளும் ராஜ தந்திரிகளும் கோஷிக்கின்றனர். யுத்தமும் வலுத்துக்கொண்டே வருகிறது. "வின்ஸ்டன் சர்ச்சில் இன்னும் முன்னமேயே பிரதம மந்திரியாக வந்திருக்கக்கூடியவர். ஏதோ துரதிருஷ்ட வசமாக அப்படி நேராமற் போய்விட்டது. ஆனால் இனி யுத்தத்தை நடத்தக்கூடிய ஓர் பிரதான தலைவன் இல்லை என்கிற அதிருப்திக்கிடமில்லை" என்றார் பிரிட்டிஷ் பத்திரிகை கூறுகிறது. இப்படிப் போடப்பட்ட புகழ் மாலைகளை சர்ச்சில் கௌரவத்துடன் அணிந்து திடசித்தத்துடன் தான் யுத்தத்தை நடத்துகிறார் என்று தெரிகிறது. சர்ச்சிலின் வீரத்வத்துக் கிணங்கி அவர் தன் மந்திரி சபையை அமைத்துக்கொண்டார். தொழிற்கட்சியினருக்கும் வேண்டிய வளவு பதவியளித்திருக்கிறார். இதனால் தான் பல ராஜதந்திரிகளும் மிக்க திருப்தியடைகிறார்கள்.

தான் பிரதம மந்திரியாக வந்து முதல் தடவையாக ரேடியோவில் பிரிட்டிஷார்களின் ஹிருதயத்தையே அபஹரிக்கும் தன்மையில் சர்ச்சில் பேசி இருக்கிறார். "இப்பொழுது ஓர் நெருக்கடியான நிலைமையில் நாம் இருக்கிறோம். மிகவும் தீரமாக திடசித்தத்துடன் யுத்தம் செய்யவேண்டும்" என்று கூறினார். "பிரிட்டிஷ் மக்கள் அவரவர்கள் சுயநலத்தையே கருதாது பிரிட்டனிற்கு நேர்ந்திருக்கும் அபாயத்தையும், ஜன நாயகத்திற்கும் சிறு நாடுகளுக்கும் வந்திருக்கும் ஆபத்தையும் நன்குணர்ந்து ஓர் உண்மை ஆர்வத்துடன் போராடவேண்டும்" என்று கூறினார்.

சர்ச்சிலின் ரேடியோ பேச்சைக் கேட்டு அமெரிக்கா மிகவும் திருப்தியடைந்திருக்கிறது என்று தெரிகிறது. பிரிட்டிஷ் பத்திரிகைகள் சர்ச்சிலின் பேச்சிலுள்ள ஓர் விறுவிறுப்பைக் கண்டு திருப்தியடைந்தன. சர்ச்சிலின் வேண்டுகோளின்படி பிரிட்டிஷ் மக்களும் தங்கள் சுய நலத்தைக் கருதாது தேசத்தின் க்ஷேமத்துக்காக தங்கள் சொந்த லாபத்தையும் விட்டுக்கொடுக்கவேண்டும் என்று அபிப்ராயங் கூறுகின்றன.

சர்ச்சிலின் ரேடியோ பேச்சிற்குப் பிறகு லண்டனிலுள்ள சில தனிப்பட்ட ஸ்தாபனங்களை யுத்த சமான்கள் உற்பத்திசெய்ய சர்க்கார் தாங்களே எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது.

பிரிட்டிஷ் மந்திரி சபை மாறியது போல் பிரெஞ்சு மந்திரி சபையிலும் ஓர் முக்கியமான மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. நேச சேனைகளின் தலைவராக ஜெனரல்வேகாங்கை நியமித்திருக்கிறார்கள். ஜெனரல்வேகாங் யுத்தத்தை நடத்துவதில் நிபுணர் என்று பிரபல ராஜதந்திரிகளின் கருத்து. இவர் நியமனம்பற்றி ராணுவ உத்தியோகஸ்தர்கள் எல்லோரும் திருப்தியடைந்திருக்கிறார்கள் என்று செய்தி கூறுகிறது.

நேச தேசங்கள் தங்கள் யுத்த பலத்தை அதிகப்படுத்திக்கொண்டு வரும் சமயத்தில், ஜெர்மனி சர்வாதிகாரியும் தன் திட்டப்படி ஒவ்வொரு இடமாகக் கைப்பற்றிக்கொண்டே வருகிறார். ஹாலந்து ஐந்து தினங்களில் ஜெர்மானியர் வசமாயிற்று. பெல்ஜியத்தில் தீவிர யுத்தம் நடந்து வருகிறது. மேஷிநாட் அரணையும் தாண்டி விட்டார்கள் என்று செய்திகள் கூறுகின்

றன. பெல்ஜியத்தில் நேச தேசத்துப் படையினரும் ஜெர்மனியரும் கலந்து யுத்தம் செய்கிறார்களாம்.

ஜெர்மன் போர்வீரர்கள் மேற்கில் பிரிட்டிஷ் கால்வாய்ப் பக்கமாக முன்னேறிக் கொண்டு வருகிறார்கள் என்று கடைசியாக வந்த செய்திகள் கூறுகின்றன.

"பெல்ஜியத்தில் சில தவறுகளால் நேசத் துருப்புகள் பின்வாங்கினாலும் நமக்கு வெற்றி நிச்சயம் கிடைக்கப் போகிறது" என்று கர்ஜிக்கிறார் பிரெஞ்சு பிரதம மந்திரி ரீனாட்.

ஜெர்மெனி நெதர்லாந்து பிரதேசத்தில் வெற்றிபெறுவதைக்கண்டு ஜனநாயகத்தில் பற்றுள்ள நடுநிலைமை நாடுகள் மிகவும் அதிருப்தியடைந்திருக்கின்றன. அமெரிக்கா வெளிநாட்டு மந்திரி "ஜெர்மனியின் ஆக்கிரமிப்பு பெருகுவதை நாம் மௌனமாகப் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. அதனால் நமக்கு ஆபத்து நேரிடும்" என்று எச்சரிக்கிறார். இந்நெருக்கடி அமெரிக்காவையும் யுத்தத்திற்கு இழுக்குமோவென்று சந்தேகிக்கும்படியாக இருக்கிறது.

இத்தாலியில் நேசநாட்டுக்கு விரோதமாக பிரசாரம் நடந்து வருவதாகத் தெரிகிறது. ஜெர்மனியின் வெற்றி இத்தாலிக்குத் திருப்தி யளித்திருக்கிறதுபோல் தோன்றுகிறது.

## இந்தியாவில்

இந்தியாவில் எங்கும் நாஜீ அட்டூழியங்களைக் கண்டித்துப் பேச்சு நடந்து வருகிறது. ஜனநாயத்திற்கு வந்திருக்கும் ஆபத்தை இந்தியர்கள் பூரணமாக அறிந்து வருகிறார்கள். இந்தியா ஜனநாயகத்தைக் காக்கத் தீவிர முயற்சி எடுத்துக் கொள்ளத் தயாராகத்தான் இருக்கிறது. என்று தலைவர்கள் கூறுகிறார்கள். ஆனால் இந்தியா ஜனநாயகத்துக்கு உதவியாகப் போகவேண்டுமென்றால், தானும் ஓர் சுயேச்சையடைந்த ஜனநாயக நாடாக இருந்தால்தான் முடியும் என்று எல்லோரும் அபிப்ராயப்படுகிறார்கள்.

நியூ ஸ்டேட்ஸ்மன் என்ற பிரிட்டிஷ் பத்திரிகையில் எச். என். பிரெய்ல்ஸ் போர்டும் இதைத்தான் எடுத்துக் கூறி இருக்கிறார். பிரிட்டிஷ் சர்க்கார் இந்தியப் பிரச்னையை ஒழுங்குபடுத்த வேண்டியதவசியம் என்று வற்புறுத்துகிறார். ஜின்னாவின் இரு சமூகத் தீர்மானத்தைக் கண்டித்து அரசியல் நிர்ணய சபை அவசியம் அமைக்கப்படவேண்டும் என்று கூறினார்.

காந்திஜி ஓர் கௌரவமான சமரஸத்தைப் பிரிட்டிஷ்காரருடன் செய்துக் கொள்ள தான் தயாராக இருக்கிறதாகத் தெரிவிக்கிறார்.

ஸ்ரீ ஜவஹர்லால் நேரு சென்ற வாரத்தில் விடுத்த அறிக்கையில் சட்ட மறுப்பு இயக்கம் சீக்கிரத்தில் கையாளப்படாது என்று கூறுகிறார். "பிரிட்டனின் அபாயமே நமக்குத் தகுந்த உபாயம் என்று சிலர் கருதுவதை நான் மறுக்கிறேன். பிரிட்டன் மெலிந்து கிடக்கிறது என்ற எண்ணத்தைக் கொண்டு நாம் அதைத் துன்புறுத்தக்கூடாது" என்று தெரிவித்தார். ஆனால் இதனால் சட்ட மறுப்பு இயக்கமே இப்பொழுது கையாளப்பட மாட்டாது என்று எண்ணுவது பிசகு என்று கூறுகிறார். சட்ட மறுப்பு இயக்கத்திற்கு ஜனங்கள் எல்லோரும் தயாராக இருந்தால் தகுந்த சமயத்தில் கையாளப்படலாம் என்று கூறினார்.

மதுரூஸ் ஜில்லா அரசியல் மகா நாடு சென்ற வாரம் கோகலே ஹாலில் நடந்தது. மகா நாட்டைத் திறந்து வைத்துப் பேசும் போது ஸ்ரீ சக்கரவர்த்தி ராஜ கோபாலாச்சாரியர் "பிரிட்டன், இந்தியாவின் வளர்ந்து வரும் பலத்தை உணர்ந்து ஜனநாயகத்தை நிலை நாட்டும் போரில் அதைப் பெறவேண்டும்" என்று எச்சரிக்கை செய்தார். சுதந்திரம் அடைந்த இந்தியாவே பிரிட்டனுக்கு உதவி செய்யும் என்று கூறினார்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

விழுப்புரம் தாலூக்கா அனுமந்தபுரம் கிராம விவசாயி ஸ்ரீ ஏ. எஸ். வெங்கட்ராவ் அக்கிராமத்திலுள்ள. விவசாயிகளுக்கு கரும்புப்பாலிலிருந்து வெல்லம் காய்ச்சும் முறையைச் செய்துக் காண்பித்தார். இப்பரிசோதனையை விவசாய டிமான்ஸ்ட்ரேடர் ஸ்ரீ. டி. வி. ஸ்ரீனிவாசாச்சார்லு நடத்தி வைத்தார். கூடவிருந்து காய்சசி எடுக்கப்பட்ட வெல்லம் நல்ல நிறத்துடன் கூடி இருந்ததாம். இது போன்று தயார் செய்யப்படும் வெல்லத்துக்கு அதிக விற்பனைக்கு இடம் இருக்கிறது என்று தெரிகிறது. இந்த முறையைப்பின்பற்றி செவ்வையாய் நடத்தினால் வெல்ல உற்பத்தி குடிசைத் தொழிலில் ஓர் முக்கிய அம்சமாகிவிடும்.

* * *

சென்னை காங்கிரஸ் மாளிகை நிதிக்கு கோலாலம்பூர் பிரதம தமிழ்த் தினசரி "தமிழ் நேச"னின் நிர்வாக ஆசிரியர் ஸ்ரீமான் ஜி. பார்த்தஸாரதி ஐந்தாவது தடவையாக ரூ. 5000 அனுபபி இருக்கிறார். இதுவரையில் தமிழ்நாடு காங்கிரஸ் மாளிகை நிதிக்காக அவர் பாடுபட்டு கோலாலம்பூர் தமிழன்பர்களிடமிருந்து வசூலித்து அனுப்பிய தொகை மொத்தம் ரூ 20,000 என்று தெரிகிறது. மலாய் நாட்டில் சுமார் 17,500 தமிழர்கள் இந்நிதிக்கு அவரவர்களுக்கு இயன்றவரையில் கொடுத்துதவி இருக்கிறார்கள் என்று ஸ்ரீ ஜி. பார்த்தஸாரதி கூறுகிறார்.

* * *


திருச்செங்கோட்டுக் கருகில் எடப்பாட்டி ஆவணிப்பேரூர் சொஸைடியின் ஆதரவில் சென்ற மேமீ 12௳ இரவு பாடசாலை ஒன்று திறந்து வைக்கப்பட்டது. அன்று 3-45 மணிக்கு விருந்து முடிந்ததும் ஸ்ரீ கே. ஏ. நாச்சியப்ப கவுண்டர் எம். எல். ஏயும், ஸ்ரீ டி. எம். சின்னையா பிள்ளையும் போர்டு எலிமெண்டரி ஸ்கூல் கட்டிடத்திறகு அழைத்துச் செல்லப்பட்டனர். அக்கிராஸனாதிபதி ஸ்ரீ சின்னையா பிள்ளை இரவு பாடசாலையைத் திறந்து வைத்தார். தலைவர் பிரஸங்கத்தில் இரவு பாடசாலையின் நன்மைகளையும், அதை நடத்தும் விதத்தையும் எடுத்துக் கூறினார். ஸ்ரீ. கே. வி. நாச்சியப்ப கவுண்டர் "சிக்கன வாழ்வும் கல்வியின் அவசியமும்" என்பதுபற்றி வெகு நேரம் பேசினார்.

* * *

தியாகராயநகர் கோவாபரேடிவ் சொஸைடி ஹாலில் ஸ்ரீ சங்கர ஜயந்திக் கொண்டாட்டம் இந்த மாதம் 12௳ ஆரம்பித்து 20௳ முடிவு பெற்றது. இந்த ஒன்பது நாட்களில் தினமும் காலை நேரங்களில் வேதபாராயணத்துடன் பூஜை நடைபெற்றது. இரவில் மதராஸ் ஸம்ஸ்க்ருத கல்லூரி, சிதம்பரம் அண்ணாமலை சர்வ கலாசாலை, திருப்பதி ஸம்ஸ்க்ருத கல்லூரி, முதலிய விடங்களிலிருந்து வந்திருந்த பேராசிரியர்கள் உபநிஷத்துகளிலும், பிரம்ம ஸூத்திரங்களிலும் குறிக்கப்பட்ட அதவைத முறைகளைப்பற்றி சொற்பொழிவாற்றினார்கள். சென்ற 19௳ பிரம்ம ஸூத்ர பாஷ்யத்தைப்பற்றி தமிழிலும் ஸமஸ்க்ருதத்திலும் சர்ச்சை நடந்தது. பல பிரபல பண்டிதர்கள் அதில் கலந்து கொண்டார்கள். ஸ்ரீ கே பால சுப்ரமணிய அய்யர் அதுசமயம் தலைமை வகித்தார். 20௳ ஜயந்தி விழாக் கொண்டாட்டம் முடிவடைந்தது.

* * *

ஸ்ரீ கே. ஸந்தானம் எம், எல். ஏ. யின் தலைமையில் தமிழ் நாட்டில் பிரசாரம் செய்வதற்காக சென்ற 14௳ பிற்பகல் கிளம்பிய ஸத்தியாக்கிரகிகள் பல கிராமங்களையும் நகரங்களையும் சுற்றிவிட்டு திரும்பவும் சென்ற 20௳ காலை 10—30 மணிக்கு தஞ்சாவூர் வந்து சேர்ந்தார்கள். கள். ஜனங்களின் சுயேச்சை ஆர்வத்தை அவர்கள் கண்டு மிகவும் திருப்தி யடைந்தார்கள். இது தமிழ் நாட்டில் காங்கிரஸுக்கு இருக்கும் செல்வாக்கையே காட்டுகிறது என்று தலைவர் ஸ்ரீ கே. ஸந்தானம் கூறினார்.




இரண்டுவாரமாக ஜெர்மன் யுத்த இடி முழக்கத்தில் ஹாலண்டு, பெல்ஜியம்போல், என் "போகிறபோக்கிலும்" அகப்பட்டுக் கொண்டு ஸ்தம்பித்துப் போய்விட்டது. எழுத ஓடவில்லை. நெருப்பு விமானக் கப்பல்போல் என் தலையும் சுற்றி பொரி பறந்து கொண்டிருந்தது.

நெவில்லி சேம்பர்லின், பிரதம மந்திரி பதவியை கடைசியாக ராஜிநாமா செய்து விட்டார் என்று ரயில் பிராயணம் செய்யும் பொழுது, பல பல வென்று பொழுது விடியும் தருணத்தில் கேள்விப்பட்டேன்— ஆசிரியர்கள் தினசரி படிக்கிறதில்லை. நான் இந்த செய்தியை கேள்விப்பட்டவுடன் ஜன நாயகத்திற்கு நல்லகாலம் பிறந்து விட்டதென்று மகிழ்ந்தேன். உண்மையான வெற்றிக்கு இனிமேல் வழி பிறக்கலாம் என்று எண்ணி சந்தோஷமடைந்தேன். இனிமேல் க்ஷேமந்தான்.

இந்தியாவுக்கும், இந்த மாறுபாடால், நல்லகாலம் பிறக்கலாம்; நெருக்கடி தீரலாம்; தடியடி இல்லாமல் சமாதானம் பெறலாம் என்று நம்பி இருக்கிறேன்.

* * *

சென்ற இரண்டு வருஷ கால பிரிட்டிஷ் மந்திரி சபையின் சரித்திரத்தைக் கொஞ்சம் ஆராய்ச்சி செய்வோம். அப்பொழுது தான் அரசியல் பிழைகள் தெரியும். திருத்திக் கொள்ளலாம்.

கொஞ்சகாலமுன் இந்திய அரசியலில் உயர்ந்த ஸ்தானம் வகித்த ஓர் ஆங்கிலப் பிரபுவைக் கண்டு பேசிக் கொண்டிருந்தேன். யுத்த விஷயம் எல்லாம் சரியாக நடந்து கொண்டு வருவது போலும், இந்தியா சம்பந்தப் பட்டவரையில் அவர்கள் எதிர்பார்த்த அளவுக்கு ஒத்துழைப்பு கிடைக்கவில்லைபோலும் அவர் கூறினதின் பேரில் "ஒருவிதத்திலும், மூன்று வருஷத்திய உலக அரசியல் போக்கைப்பற்றி எனக்குச் சமாதானம் கிடைக்கவில்லை. முக்கியமாய், பிரதம மந்திரி சேம்பர்லின் கொம்பைவிட்டுவிட்டு—தலைக்கயரை விட்டுவிட்டு-வாலைப் பிடிக்கப் பார்க்கிறார். ஜெர்மன் வான் ரிப்பன்டிராப் லண்டனிலிருக்கும் பொழுது போட்ட "சுக்கு பொடி" மயக்கம் தெளியவில்லை. ரஷ்யாவின் உதவியைக்கைவிடலாமா? மூனிச் ஒப்பந்தத்தைச் செய்திருக்கலாமா? நெவில்லி சேம்பர்லின், சமாதானமான காலத்தில் பொருளாதாரச் சிறப்பையும், அரசியல் ஒழுங்கையும், காப்பாற்றக் கூடியவரே ஒழிய, போர்க் குழப்பத்தில் பலரை ஒன்று சேர்த்து, ஓட்டி விரட்டி, வீரத்தை ஊட்டி, காரியத்தில் வெற்றி யடையும் தன்மை அவ

ருக்கு இருப்பதாய் எனக்குப் புலப்படவில்லை. இவர் காலத்தில் இந்தியாவின் சேடுக்கும் தீராது. பிரிட்டிஷ் ஜனநாயகத்திற்கும் போரில் வெற்றி சிரமம்" என்று நான் பிரசங்கம் செய்தேன். ஆனல் இதை அந்த ஆங்கிலப் பிரபு ஒப்புக்கொள்ளவில்லை. பலதடவைகளில் 'பாரதமணி'யில் இந்த கொள்கையைத்தான் வற்புறுத்தி இருக்கிறேன்.

* * *

நெவில்லி சேம்பர்லின் ஸ்தானத்திற்கு இப்பொழுது வின்ஸ்டன் சர்ச்சில் வந்திருக்கிருர். 'எலெக்டிரிக்' விசிரியின் கீழ் உட்கார்ந்திருந்துவிட்டு, தெருவிலடிக்கும் புயற்காற்றில் மாறுவதுபோல் இந்த மாறுதல். இதுவும் இந்த நெருக்கடியில் தேவைதான். ஜாக்கிரதையாய் வழியைப் பார்த்து நடக்கவேண்டும்.

இன்றையதினம் கடும்போர் தீவிரமாய் பிரான்சிலும் பரவிவருகிறது. ஸர்வாதிகாரிகளின் கை இப்பொழுது தற்காலம் மேல் ஓங்கி நின்ருலும், முடிவில் ஜனநாயகம் தான் நிச்சயம் வெற்றியடையும் என்று நம்புகிறேன். ஆனல் தானகவே வெற்றி போரில் கிடையாது. நாம் தீர்க்கதர்சிகளாய் திட்டம் போட்டு, சுருசுருப்புப் படுத்திஞல் தான் வெற்றி. போரும் விவசாயம் போல் தான். பிரிட்டிஷ் மந்திரிசபை செய்ய வேண்டியது என்ன வென்ருல், (1) ஜனநாயகத்தைக் கையாண்டுவரும் நாடுகளை எப்படியாவது, எதைக் கொடுத்தாவது ஒன்று சேர்த்து, ஐக்கியப்படுத்தி அவற்றின் உதவியையும், ஆதரவையும் உடனே பெற வேண்டும். (2) முக்கியமாய் இந்த நெருக்கடியில் இந்தியாவின் ஆதரவும், அமெரிக்காவின் உதவியும், நேச நாட்டுக்கு அவசியம் வேண்டும். (3) ருஷ்யாவுக்கு ஓர் தக்க ஆங்கில மந்திரியை, ஓர் இந்தியருடன் சேர்த்து அனுப்ப வேண்டும்.

இந்தியாவின் உதவி போராடி வெற்றி பெறவும், பிறகு சரியான சமாதான உடன் படிக்கைத்திட்டம் போடவும் அவசியம் வேண்டும். ஐரோப்பாவின் கையில் நான், சமாதான உடன் படிக்கையை, வெற்றியடைந்த பிறகு, கொடுக்க மாட்டேன்—மருபடியும் வார்ஸேயில்ஸ் விஷ விருக்ஷம் முளைத்துவிடும்.

இந்தியாவின் இந்த பரிபூர்ண உதவியை அடைய ஒரே ஒரு வழிதான். இந்தியாவுக்கு அரசியல் நிர்ணய சபைமூலம், சுயராஜ்யம் அளிப்பதாக உடனே பிரிட்டிஷ் மந்திரிசபை வாக்குத் தத்தம் செய்து கொடுக்க வேண்டும். பிரிட்டிஷ் யுத்த மந்திரி சபையில் ஜனங்களின் ஆதரவைப் பெற்ற ஓர் இந்திய பிரதிநிதியை உடனே நியமித்து இந்தியாவை கௌரவப்படுத்த வேண்டும். இந்த பிரதிநிதித்வத்தை வகிக்கக் கூடியவர்கள் பல தேசபக்தர்கள் நமக்குள் உண்டு. அதில் முக்கியமாய் சக்ரவர்த்தி ராஜகோபாலாசாரியாரும், பண்டிட் ஜவஹர்லால் நேருவும் தான். இந்த நெருக்கடியில், இவர்கள் பிரிட்டிஷ் யுத்த சபையுடன் கலந்து கொள்வது அஹிம்ஸா தர்மத்திற்கு விரோதமாகாது என்று எண்ணுகிறேன். பிரிட்டிஷ் மந்திரி சபை இவ்வளவு தீர்க்க தர்சியா யிருக்க வேண்டுமே என்பதுதான் என் கவலை.

வெற்றிக்கு ஒரு வழிதான். ஜனநாயகத்தைக் கையாண்டுவரும் நேச நாடுகளை ஒன்று சேர்த்து பலப்படுத்த வேண்டியதுதான். தான் என்று தனிவழி செல்ல இது காலமில்லை.

மணி

# அதிகப் பிரஸங்கம்

"ஆண்டு நிறைவு"

பல வருஷங்கள் கழிந்தன. குழந்தையே பிறக்கவில்லை. வம்சம் நசித்து விடுமோ என்ற கவலை எங்கும் குடிகொண்டது. இல்லாத மரங்களுக்கும் பொல்லாத மரங்களுக்கும் மணம் முடித்தார்கள். நாகப் பிரதிஷ்டை செய்தார்கள். கடைசியாகக் கருவுற்றனள். எங்கும் குதூஹலம். ஒரு கெடுதலுமின்றிப் பிரஸவம் ஆக வேண்டும் என்று நாடெங்கும் பிரார்த்தனைகள் நடைபெற்றன. "முந்தித் தவமிருந்து, பல நூறுநாள் சுமந்து, மந்திரங்கள் பல ஓதி, மாதவமும் தான் புரிந்து மார்தர்தம் மனம்மகிழ, நல்லோசையுடன் பிறந்ததோர் சுந்திரக் குழந்தை பாரிலோர் நூதன யக்திரமாய்" பல ஜோதிடர்கள் ஜாதகம் கணித்து "ஆயுர்பாவம், பாக்ய பாவம், புத்திர பாவம், வித்யா பாவம், முதலியவைகள் மிகவும் நன்றாக இருக்கின்றன. பாலாரிஷ்டம் அதிகமில்லை" என்று அபிப்ராயபேதம் இன்றிக் கூறினர்கள்: "இகுட்டியின் ஜாதகம் ஒண்ணாங் கிளாஸ் ஆயிட்டிருக்கு" என்று சுண்டு விரலைக் காட்டிப் பிரபல மலையாள ஜோதிடர், முறுக்கான் நிறைந்தவாயுடன் கூறினர்.

இவ்விதம் அரும்பாடுபட்டு, அருமையாய், குலவிளக்காய்ப் பிறந்த குழந்தையை வளர்ப்பதுபற்றிக் கவலை ஏற்பட்டது. "ஆயிரங் காலத்துப்பயிர். உங்கள் அனைவருக்கும் உயிர். இதை நம்பியிருக்கும் உங்கள் அனைவருக்கும் இக்குழந்தை சொந்தமானது. ஆகையால் இப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள எனக்குப் பயமாகிறது. வேண்டிய பணமும் மனிதர்களும் கொடுத்து விடுகிறேன். வளர்க்கும் பொறுப்பை நீங்களே ஏற்றுக்கொள்ளுங்கள்" என்று குழந்தையின் உடமை ஸ்தர் கூறிவிட்டுத் தன் வாக்கையும் நிறைவேற்றி விட்டார்.

இவ்வருமைக் குழந்தைக்கு "திருச்சி ரேடியோ நிலையம்" என்று நாமகரணம் செய்தார்கள். வளர்ப்பதற்கு லாயக்கான வர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். குழந்தையோ யந்திரமயம். இவ்விஷயம் நன்கு கத் தெரிந்தவர்தான் எல்லாப்பொறுப்பையும் ஏற்றுத்தலைமை வகிக்கவேண்டும் என்று ஸ்ரீ கோபாலனை அப்பதவியில் நியமித்தார்கள். இவருக்கு அடுத்தபடியாக ஸ்ரீ ஆசார்யா. இவர் ஒரு குஷிப்பேர்வழி. குழந்தையை அழவிடாமல், குஷிப்படுத்தித் தட்டிக்கொடுத்து, வேடிக்கைகளெல்லாம் காட்டி சிரிக்கவைத்து வளர்க்க ஒரு ஆள் வேண்டாமா? அதற்கு இவர் நியமிக்கப்பட்டார். இவர்களுக்கு அடுத்தபடியாக ஸ்ரீ பார்த்தஸாரதி இருக்கிறார். இவர் ஒரு பெரிய வேதாந்தி. குழந்தை வளர்ப்பதில் நல்ல பழக்கமுண்டு. முன் ஒரு சமயம் தன் வேதாந்த மூட்டையைக் கட்டவிழ்த்துத் தன் குழந்தையை "பாலயோகினி" யாக மாற்றியவர். இவரை எல்லோரும் D. P. என்று கூப்பிடுகிறார்கள். 'தண்டம் பிண்டம்' என்று நினைத்து விடாதீர்கள். (Director of Programmes) என்று அதற்கு அர்த்தம். குழந்தை வளருவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் எல்லாம் இவர் கையில்தான் இருக்கின்றன. இவர்களுக்கு உதவியாக ஸ்ரீமான்கள் ஜானகிராம், ரங்கநாதன், ரங்காச்சாரி, சேஷகிரி, சங்கரன், காளிதாஸ், முதலியவர்கள் இருக்கிறார்கள். சங்கீதம், நாடகம், பேச்சு, கூத்து, கிராம சங்கதிகள், பாஷாபி விருத்தி முதலிய பலரக விஷயங்களை இவர்கள் கவனித்துக் குழந்தையைப் போஷிப்பது இவர்கள் பொறுப்பு. பொது ஜனங்களில், அநேகர் நாள்தோறும் சென்று கவனித்து வந்தார்கள். "நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய்" வளர்ந்துவந்த இக் குழந்தையின் செய்கைகளையும் விளையாட்டுகளையும், சிறிதும் தவறாமல் அடிக்கடி பொது மக்களுக்கு "இரு விச்வநாதர்களும்" ஸ்ரீமதி கண்ணம்மாளும் கூறிவந்தார்கள்.

குழந்தைகளை வளர்ப்பது ஸ்திரீகளின் காரியமாக இருக்கப் பல ஆண்களை இக் காரியத்தில் நியமித்தது சரியா என்று யோஜிக்கலாம். ஸ்த்ரீ புருஷ ஸமத்துவத்தைக் காட்ட ஆண்கள் இவ் வேலையை எடுத்துக்கொண்டார்கள் என்று எண்ண வேண்டாம். இக் குழந்தை அஸாதாரணமானது. இதை வளர்க்கத் தனியான திறமை வேண்டும். பெண் என்று இதில் சலுகையோ, பாத்தியமோ காட்ட முடியாது. யாருக்குத் திறமை இருக்கிறதோ அவர்தான் வேண்டும். ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி, திறமை இல்லாதவர் இவ் விஷயத்தில் உபயோகமற்றவர் என்பது குழந்தையின் சொந்தக்காரரின் எண்ணம்.

இக் குழந்தையைக் குஷிப்படுத்த, நாடக கோஷ்டி, சங்கீத கோஷ்டி, கிரமக் கோஷ்டி, எழுத்தாளர்கள் முதலியவர்கள் நிரந்தரமாக ஏற்படுத்தப்பட்டு குழந்தையின் அருகிலேயே இருக்கிறார்கள். ஸ்ரீமான்கள் பார்த்தசாரதி, த்யாகராஜன், விஜயக்ருஷ்ணன், கணேசய்யர், சுப்பிரமணிய பிள்ளை, சிட்டி சுந்தரராஜன் ஸ்ரீமதி பகவதி, முதலியவர்கள் இவர்களில் முக்ய மானவர்கள்.

இவர்கள் யாவரும் தங்கள் பொறுப்பைத் தலைமேல் சுமந்து கவனிக்கவே, குழந்தை "கொழுகொழுகன்றாய்" வளர்ந்து வந்தது. ஆனால் பாலாரிஷ்டம் சும்மாவிடுமா? திடீரென்று ஒருநாள் ஜல தோஷம் ஏற்பட்டது. லேசான ஜல தோஷமா? இல்லவே இல்லை. எங்கும் ஜலமயம். ஜலம் தலைக்கேறியது. "ரத்த ஓட்டம்" தடைப்பட்டது. "ஓசை யடங்கிற்று." ஒருதினம் "பேச்சு மூச்சே" கிடையாது. ஒருவர் முகத்திலாவது "ஈயாடவில்லை" "பயப்பட வேண்டாம். குழந்தை பிழைத்துவிடும்" என்று கூறி "இசைத்தட்டு இன்ஜெக்ஷன்' செய்து, சென்னை, பம்பாய, டெல்லி முதலிய இடங்களிலிருந்து "மருந்தும் மாத்திரைகளும் கடன் வாங்கிக் கொடுத்து" குழந்தைக்கு "மூச்சு உண்டாக்கிப் பேச்சு உண்டாக்கினார்கள்" ஒன்றிரண்டு தினங்களுக்குப் பொது ஜனப் பிரதிநிதிகளும் குழந்தையிடம் போக முடியாமல் தவித்தார்கள். கடைசியாகப் பிரம்மப் பிரயத்தினம் செய்து குழந்தையைக் காப்பாற்றினார்கள்.

இக்கண்டத்திலிருந்து தப்பிய குழந்தை சிறிது காலம் சௌக்கியமாக இருந்தது. ஆனால், திடீரென்று இன்னொரு கண்டம் வந்து சேர்ந்தது. "திருச்சிக் குழந்தை" யைப்போல், சென்னை, பம்பாய், கல்கத்தா, டெல்லி, லாஹூர், லக்னோ, டாக்கா ஆகிய இடங்களிலும் குழந்தைகள் உண்டு. இவைகளைக் கவனித்துக்கொள்ளும் பெரும் பொறுப்பை "லயனல்ஃபீல்டன்" என்ற துரை ஏற்றுக்கொண்டிருந்தார். அவருக்கு என்ன கோபமோ தெரியவில்லை; ஒரு நாள் "எங்கள் ஊருக்கு நான் போகிறேன்" என்று சொல்லித் திடீரென்று கிளம்பி விட்டார். ஏதடா சிறு குழந்தைகளாயிற்றே, பழக்கமான முகத்தைக் காணாது, "துரையைக் கொண்டுவா" என்று அழுது ஏங்கி இளைத்து விட்டால் என்ன செய்கிறது என்று கூட சிறிதும் நினைக்காது இவ்விதம் துரை செய்துவிட்டார். "இவருக்கு இவ்வளவு அவசரம் என்ன? ஊரில் போய் வெட்டி முறிக்கப் போகிறாரோ? குழந்தை பெரிதாகும் வரை இருந்து விட்டு, பிறகு போவதானால் போய் தொலையட்டுமே" என்று ஜனங்கள் வருத்தப்பட்டார்கள். திருச்சிக் குழந்தை பிடிவாதம் செய்து, அழுது, ஏங்கி இளைக்கவில்லை என்று சொல்லிக்கொண்டார்கள். ஆனால் உண்மையில் குழந்தை ஏங்கி இளைத்து விட்டது. இடையில் பத்து பவுண்டும் குறைந்துவிட்டது. அதை இரு விச்வநாதர்களும் வெளியிடாமல் மறைத்துவிட்டார்கள் என்ற வதந்தி எங்கும் பரவி இருக்கிறது.

இவ்விரு ஆபத்திலிருந்தும் தப்பிப் பிழைத்த குழந்தைக்குச் சென்ற 16-5-40 அன்று "ஆண்டு நிறைவு"க் கல்யாணம் வெகு விமரிசையாக நடந்தது. மேளம், பாட்டுக் கச்சேரி, கூத்து, நாடகம் முதலியவைகள் நடந்தன. பொது ஜன பிரதிநிதிகள் அநேகர் சென்று குழந்தையை

(அடுத்த பக்கம் பார்க்க)

# உதிர்ந்த மணிகள்

இந்தியாவின் ஒற்றுமை பிரிட்டனின் சிருஷ்டியல்ல. நாகரீகம் பிறக்கும்போதே அதுவும்கூடப் பிறந்தது. அன்றிலிருந்து இன்றுவரை பல நூற்றாண்டுகளாக நீருக்கும் நெருப்புக்கும் அஞ்சாமல் உயிருடனிருந்து வருகிறது. அசோகர் காலத்தில் அது இருந்தது. அக்பர் காலத்தில் இருந்தது. மொகலாயர்களுக்குள் பிளவு ஏற்பட்டபோதும் அதை "நீ ஏன் இருக்கிறாய்" என்று எவரும் கேட்கவில்லை. இப்பொழுது இந்த இருபதாவது நூற்றாண்டில் ஓர் சாதாரணப் பேர்வழி இவ்வளவுநாளாக இருந்துவந்த ஐக்கிய பாவத்தைக் கெடுக்க முடிகிறது. அதை எடுத்துக் கூற பிரிட்டிஷ் ராஜீய வாதிகளுக்குத் தோன்றுகிறது.

—டிரிப்யூன்

வெகுநாட்களாக இந்திய வாழ்க்கை எல்லாவிதங்களிலும் தேசீயத் தன்மையற்று இருந்து வருகிறது. ஒரு இந்திய சம்சாரி டைபின்னிலிருந்து டீகப் வரையில், ஹேர் பிரஷ்ஷிலிருந்து பூட்லேஸ் வரையிலும், ஃரிசியிலிருந்து ரிப்பன் வரையிலும், தனக்குத் தினசரித் தேவையான சர்வ சாமான்களுக்கும், இறக்குமதியையே நம்பி நிற்கிறான்.

—பட்டாபி ஸீதாராமய்யா

எதிரி "எந்த நிமிஷத்திலாவது படை எடுப்பேன்" என்று உறுமிக்கொண்டு இருக்கும்பொழுது யுத்தத்தின் போக்கு சரியா தப்பா என்று பிரமாதமாக விவாதம் செய்வது பிரிட்டிஷ் ஜனநாயகத்தை விளக்கிக் காட்டுகிறது.

நியூயார்க் ஹெரால்ட் டிரிப்யூன்

மூனிச் மனிதர்கள் சாமர்த்திய மற்றவர்கள் என்று சொன்னால் மாத்திரம் போதாது. அவர்கள் சாமர்த்தியமற்றவர்கள்; ஏனெனில் அவர்கள் தோழர்களைப்பற்றியும் பக்கத்து தேசத்தார்களைப்பற்றியும் ஒன்றும் கவனிப்பதே இல்லை. அவர்களுக்கு என்ன கஷ்டம் நேர்ந்தாலும் அவைகளைப் பொருட்படுத்துகிறதுமில்லை.

—எச். என். பிரேயல்ஸ் போர்டு

சர்வாதிகாரம், ஏகாதிபத்தியம் இவைகளில் ஒன்றுக்கொன்று ஏற்றத்தாழ்வே கிடையாது. நம்முடைய பிற்காலத்தைச் சீர்படுத்தவேண்டிய சக்தி நம்மிடத்திலேயே இருக்கிறது —நல்லது செய்வதற்கும் கெட்டது செய்வதற்கும். வாயை ஆவென்று திறந்துகொண்டு ஆகாயத்தைப் பார்த்த வண்ணம், சேம்பர்லின்களும் ஜெட்லண்டுகளும் செய்யாத காரியத்தை சர்ச்சில்களும், அமெரிகளும் செய்து முடிப்பார்கள் என்ற வீண் நம்பிக்கை கொண்டு நம்மை நாமே கெடுத்துக்கொள்ளவேண்டாம்.

—பட்டாபி ஸீதாராமய்யா

* * *

ஜெர்மனியின் வெற்றி இந்தியாவுக்கும் உலகத்துக்கும் பேராபத்தாய் முடியும்.

—டாக்டர் பி. ஸி. கோஷ்

* * *

நமது நாட்டில் அறிவுக்குக் குறைவில்லை. ஆனால் நமது அறிவெல்லாம் நமக்காவது தேசத்துக்காவது பிரயோஜனமில்லாமலே போய்க்கொண்டேயிருக்கிறது. இதற்குக் காரணம் நமது கல்வி முறைதான் என்று சொல்ல வேண்டுமோ? பள்ளிக்கூடங்களிலும், கலாசாலைகளிலும் மூளை வளர்ப்பவர்கள், கையை, எழுதுவதற்கும் லஞ்சம் வாங்குவதற்கும் தவிர வேறெதற்கும் பிரயோஜனமில்லாமல் செய்து விடுகிறார்கள்.

"கல்கி"

(முன் பக்கத் தொடர்ச்சி)

ஆசிர்வதித்தனர். ஊரெங்கும் சந்தோஷம். அதிகப்பிரஸங்கிக்கு அதிக சந்தோஷம். ஏனென்றால், குழந்தை இப்பொழுது பேசுகிற பேச்சைக் கேட்டால் கூடிய சீக்கிரம் பெரிய அதிகப் பிரஸங்கி ஆகிவிடும் போலிருக்கிறது. நெருக்கடியான இச் சமயத்தில் நல்ல அதிகப்பிரஸங்கி கிடைப்பது சுலபமா? ஆகையால் "மார்க்கண்டனைப்போல் என்றும் பதினறு வயது அதிகப்பிரஸங்கியாய் வாழ்வாய்" என்று குழந்தையை அதிகப்பிரஸங்கி ஆசிர்வதிக்கிறான்.

'அதிகப் பிரஸங்கி'

# நாம் பறித்த புஷ்பங்கள்

சர்ச்சில் மந்திரி சபையிலிருக்கும் மந்திரிகளின் பூர்வீக சரித்திரங்கள்

## சர்ஜான் ஸைமன்

1908முதல் 1916வரை இவர் எஸ்ஸெக்ஸிலுள்ள வால்தம்ஸ்தௌ பாகத்திற்காக பார்லிமென்டில் லிபரல் கக்ஷியினராய் அங்கம் வகித்தவர். பிறகு 1922 முதல் 1931 வரை யார்க்கிலுள்ள ஸ்பென் வாலியன் பிரதிநிதியாக பார்லிமென்டில் அங்கம் வகித்தார். 1931-ல் ராம்ஸே மாக்டானல்டு மந்திரிசபை யமைத்தபொழுது இவர் நாஷனல் லிபரல் கக்ஷியைத் தழுவினுர். 1927-ல் "வெள்ளைக் கமிஷன்" என்று சொல்லப்பட்டு இந்தியாவில் பகிஷ்காரம் செய்யப்பட்ட, மேற்படி கமிஷனின் தலைவராக இந்தியா முழுவதும் சுத்தியிருக்கிறார். தொழிற்கக்ஷியைச் சேர்ந்த ஸ்ரீ வெட்ஜ்வுட் பென் இந்தியா மந்திரியாயிருக்கும் காலத்தில், மேற்படி கமிஷனுல் இந்திய அரசியலில் மாறுதல்களுக்காகச் செய்யப்பட்டிருக்கும் சிபார்சுகள் ஏற்றுக்கொள்ளப்படாமல், ஸ்ரீ பென் வட்ட மேஜை மகாநாட்டைக் கூட்டினுர். 1873ல் பிறந்து 1899-ல் பிரபல வக்கீலான ஸைமன் 1931-ல் R. 101 என்று சொல்லப்படும் விசாரணையில் தலைமை வகித்தார், 1913-1915ல் அட்டோர்னி—ஜெனரலாகி மந்திரி சபையில் அங்கம் வகித்தார். 1916ல் உள்நாட்டு மந்திரியாக இருக்கும்பொழுது, மந்திரி சபையில் தகராறு ஏற்பட்டதின் காரணமாக ராஜீனுமா செய்தார். 1931-1935-ல் வெளிநாட்டுக் காரியதரிசியாகவும், 1935-37-ல் மறுபடியும் உள்நாட்டு மந்திரியாகவும், சென்ற சேம்பர்லின் மந்திரிசபையில் பொக்கிஷ மந்திரியாகவும் அங்கம் வகித்தார்..

## லார்டு லாயிட்

1871-ல் பிறந்தார். ஆசியாவில் நன்ருகச் சுற்றுப் பிரயாணம் செய்தவர். கான்ஸ்டான்டிநோபிலுள்ள பிரிட்டிஷ் ஸ்தானிகர் காரியாலயத்தில் 'அட்டாச்சி' யாக நியமிக்கப்பட்டார். எகிப்து, மெஸபடோமியா, ஹெஜ்டாஸ் முதலிய இடங்களில் சென்ற மகாயுத்தத்தில் வேலை பார்த்தவர். யூனியனிஸ்ட் கக்ஷியைச் சேர்ந்து 1910-1918-ல் வெஸ்ட் ஸ்டாபோர்ட்ஷயரின் பிரதிநிதியாக பார்லிமென்டில்அங்கம் வகித்தார்.1918-1923-ல் பம்பாய் மாகாண கவர்னராயிருந்தார். 1924-1925-ல் கன்ஸர்வேடிவ் கக்ஷியைச் சேர்ந்து ஈஸ்ட் போர்ன் பிரதிநிதியாக அங்கம் வகித்தார். 1925-1929-ல் ஈஜிப்ட், ஸூடானுக்கு ஹைகமிஷனராகயிருக்கும்பொழுது, தொழிற்கக்ஷி சர்க்கார் அவரைத் திருப்பியழைத்துக்கொண்டார்கள்.

## டப்கூபர்

வெஸ்ட் மினிஸ்டரில் உள்ள ஸெண்ட் ஜார்ஜ் டிவிஷனின் பிரதிநிதியாக கன்ஸர்வெடிவ் கக்ஷியைச் சேர்ந்து 1931-ம் வருஷம் முதல் பார்லிமென்டில் அங்கம் வகித்து வருகிருர். மகாயுத்தத்தில் சண்டை செயதவர். ஜட்லண்ட் கோமகனின் மகளான டியாஞவை மணம் செய்துகொண்டார். 1934-ல் பொக்கிஷக் காரியதரிசியாகவும், 1935-ல் யுத்த காரியதரிசியாகவும், சேம்பர்லின் சர்க்காரில் 1937-ல் கடற்படை மந்திரியாகவும் பதவி வகித்தார். மியூனிச் உடன்படிக்கையையும், சேம்பர்லினின் சமாதான கொள்கையையும் எதிர்த்து மந்திரி சபையிலிருந்து ராஜீனுமா செய்தார்.

## ஹெர்பர்ட் மாரிஸன்

தெற்கு ஹாக்னி பாகத்தின் பிரதிநிதியாக காமன்ஸ் சபையில் 1923-24-ம், 1929-31-ம், 1935லிருந்து இதுவரையிலும் அங்கம் வகித்து வருகிருர். 1888-ல் பிறந்த அவர் கொஞ்ச காலம் ஆபீஸ் பையனுகவும், கொஞ்ச காலம் டெலிபோன் ஆபரேடராகவும் மற்றும் கொஞ்ச காலம் ஒரு பத்திரிகையின் உதவி செர்குலேஷன் மானேஜராகவும் வேலை பார்த்தார். கடைசியில் 1929-31-ல் போக்குவரத்து இலாகா மந்திரியாக நியமிக்கப்பட்டார்.

## ஸர்ஜான் அன்டர்ஸன்

1882-ல் பிறந்து 1905-ம் வருஷம் கலோனியல் ஆபீஸில் வேலைக்கமர்ந்தார். 1920ல் அயர்லாந்தின் லெப்டினன்ட் பிரபுவுக்கு உதவி காரியதரிசியாக அமர்ந்தார். 1922-32-ல் உள்நாட்டு காரியதரிசிக்கு உதவி காரியதரிசியாக யிருந்தார். அயர்லாந்தில் திறமையாக

கலவரங்களை அடக்கியவர் என்பதற்காக 1932-37-ல் வங்காள மாகாண கவர்னராக நியமிக்கப்பட்டார். 1938-லிருந்து காமன்ஸ் சபையில் நாஷனல் சர்க்கார் கக்ஷியைச்சேர்ந்து ஸ்காடிஷ் சர்வ கலாசாலைகளின் பிரதிநிதியாக அங்கம் வகிக்கிறார். 1938-ல் உள்நாட்டு மந்திரியாகவும், 1939-லிருந்து உள்நாட்டுப் பாதுகாப்பு மந்திரியாகவும் பதவி வகித்து வருகிறார்.

## சர் அண்ட்ரூ டங்கன்

1884-ல் பிறந்தவர். இங்கிலாந்து பாங்கின் டைரக்டர். பிரிட்டிஷ் இரும்பு, ஸ்டீல் பிடரேஷன் எக்ஸிகூடிவ் கமிட்டியின் தலைவர். அவர் பார்லிமெண்டின் அங்கத்தினரான பொழுது 1939-ல் வியாபார மந்திரியாக நியமிக்கப்பட்டார்.

## எல். எஸ். அமெரி

ஜெட்லன்ட் பிரபுவிற்குப்பின் வைட் ஹாலில் இந்தியா மந்திரியாய் நியமிக்கப்பட்டிருக்கும் ஸ்ரீ அமெரி 1873-ல், இந்தியாவில் கோரக்பூரில் பிறந்தவர். இவர் தகப்பனார் இந்தியக் காட்டிலாகாவில் உத்தியோகஸ்தராயிருந்தார். ஹாரோவிலும் ஆக்ஸ்போர்டிலும் கல்வி பயின்றவர். லண்டன் டைம்ஸ் பத்திரிகையில் ஆசிரியருடன் வேலை பார்த்து வந்தார். பிறகு அதன் யுத்த நிருபராக தென் ஆப்ரிக்காவி லிருந்தார். சென்ற மகாயுத்த ஆரம்பத்தில் பிளாண்டர்ஸிலும், கீழ்ப் பாகத்திலும் சண்டை செய்தார். 1917-ல் யுத்த மந்திரி சபையின் உதவி காரியதரிசியாக வேலை பார்த்தார்.

1911 முதல் யூனியனிஸ்ட் கக்ஷியினராக ஸ்பார்போக்கின் சாாபாக அங்கம் வகித்து வருகிறார். 1922-24-ல் கடற்படை மந்திரியாகவும், 1924-29-ல் டொமினியன் மந்திரியாகவு மிருந்தார். பிரிட்டிஷ் டொமினியன்களில் நன்றாக பிரயாணம் செய்தவர். ஸ்ரீ அமெரி சில புத்தகங்கள் எழுதி இருக்கிறார்.

## மால்கம் மாக்டானெல்ட்

காலஞ்சென்ற ராம்ஸே மாக்டனல்டின் புதல்வர். 1936-லிருந்து ராஸம், கிராமர்டின் பிரதிநிதியாக காமன்ஸில் அங்கம் வகித்து வருகிறார். 1831-35-ல் குடியேற்ற காரியாலயத்தின் பார்லிமென்டரி காரியதரிசியாகவும், 1935-ல் காலனிகள் மந்திரியாகவும், 1935-38 லும், 1938-39-ம் குடியேற்ற நாட்டு மந்திரியாகவும் பதவி வகித்தார். மாக்டனல்டிற்கு இப்பொழுது வயது 39.

## எர்னெஸ்ட் பெவின்

புதிய தொழில் மந்திரியாய் நியமிக்கப்பட்டுள்ள ஸ்ரீபெவின் 1929-ல் பிறந்தார். போக்குவரத்து, பொதுத் தொழிலாளர் சங்கங்களின் பொதுக் காரியதரிசியா யிருந்தார். கொஞ்ச காலம் பொருளாதார அட்வைஸரி கவுன்ஸிலில் அங்கத்தினராயிருந்தார். 1937ல் டிரேட் யூனியன் காங்கிரஸின் பொதுக் கவுன்ஸிலில் தலைமை வகித்தார். "டெயிலி ஹெரால்டின்" உதவித் தலைவர்.

## அறிக்கை

பாரதமணிக்கு விஷய தானம் செய்பவர்கள் கவனிக்கவேண்டிய சில முக்கிய விஷயங்கள் :—

(1) கதைகளோ கட்டுரைகளோ பாரதமணி பக்கங்களில் மூன்றுக்கு மேற்படாமல் இருக்கவேண்டும்.

(2) காகிதத்தின் ஒரே பக்கத்தில் தெளிவாக எழுதப்பட்டிருக்க வேண்டும்.

(3) கதைகள், கட்டுரைகள் எழுதுவோரின் முழுவிலாஸமும், அவர்கள் வயதும் தொழிலும் குறிக்கப்பட்டிருக்கவேண்டும்.

(4) வேண்டிய தபால் பில்லை அனுப்பினாலொழிய, பிரசுரத்துக்கு அங்கீகரிக்கப் படாத கதைகள் கட்டுரைகள், திருப்பி அனுப்பப்படமாட்டா.

ஆசிரியர்

# மேகத் தூது

"சோக்கன்"

மென்முகிலே, ஆகமென் பைம்முகிலே!
வன்முடுக்காய் யாங்குநீ பறக்குதியோ?
என்மனத்துக் கண்ணீர்நின் கண்தெரியாப்
புன்மையோ நீஉலாவும் வான்முகட்டே?
கருதாய் சிறிதென்னை! (க)

சுவடுகாட்டா நின்பாதை எந்நாடு ஊர்கிறதோ?
குவைசிதைத்துக் கோலமுத்து ஒழுக்கியன்ன கிழக்குமலைக்
கவைத்தொடரும் கானலோரக் கஞ்சநாடும் அறிதியோ?
இவர்கிருய், வடக்குநோக்கி; காதலேற்கு உய்விலையோ?
இரங்காய் குறித்தென்னை! (உ)

குன்றுச் சரிவிலே, வெண்சுதைத் தான்தனி
நின்ற அவர்குடிசை சேணுனக்குத் தோன்றலும்
அக்கிடையே, அக்கணமே,
மன்றலம் ஜோந்திரை வெண்புடவைப் பூம்பனியார்
துன்றல்போல் நீலநீள் வானில்,
அவர்கண்டு தவறேரச்
சென்றுநீ தொங்காயோ படர்ந்து? (ங)

வெப்பம் மழுங்குதலால், கம்பளியே தோரணப்பொன்
ஒப்பனைத்த மேற்குவாசல், ஆதித்தனர் நண்ணலும்,
அக்கிடையே, அக்கணமே,
எப்பண்டும் ஓங்கியமென் ஊதா அணிந்துநீ
கப்புஉச்சிக் குன்றம் தெவிட்ட,
அவர்கண்டு கவலைகொள்ளச்
சப்பாயோ முத்தம் நெடிது? (ச)

ஓய்ந்தடங்காப் பிள்ளைக் கடலலைகள் நோக்கற்குச்
சாய்ந்தமுகப் பேதையன் சந்திரனைக் காணலும்
அக்கிடையே, அக்கணமே
பாந்தள்போல் பின்உற்று, ஆடையில் ஈர்த்தொளித்து
மாய்ந்தபோல் மூர்ச்சையில் வீழ,
அவர்கண்டு தவிக்கற்கே
தோய்ந்துநீ புல்லிப் புதை. (ரு)

காற்றும் புயலும் கடுகியுன்னைத் தாக்கவந்து
போற்றும் அணிமணிகள் பற்றிட மோதலும்,
அக்கிடையே, அக்கணமே,
மாற்றுவிலை செப்பரிய மின்னலை மார்பில்நீ
வேற்ருேர் அறியா அடக்கமாய்,
அவர்கண்டு உவர்ப்புநீங்க
தோற்றமிப்போல் நாணித் திரும்பு. (சு)

இன்ன காணின்,

தெற்குத் தமிழகம் போவோர் துணையில்
புற்கென என்னைப் பிறந்தகம் போக்கி
எற்குக் கடிதமும் நெடுநாள் விடுக்கிலாக்
கற்கொடும் கணவர் காதல் நினைப்பர். (எ)

சொல்லெனது புல்லாயோ?

இன்று வருவர் இன்றே என்று,
என்றும் ஊதா அணிந்து காக்கிறேன்.
கொன்றன்ன நோக்கியேல், "அசடே, புடவை
நன்றுவேறு இல்லையோ" என்கிருள், அன்னை. (அ)

தண்பனி மிடைந்த
கண்பல உடையோய்!—அவர்
மண்பரற் கொடுமையை—ஒருதுளி
விண்பிழியால் தடுக்காயோ?—எனது
புண்பசலை துடைக்காயோ? (கூ)

---

* பிரிவாற்ருமையாலும், கணவனிடமிருந்து கடிதம் வாராததாலும் கவன்ற மனைவி, மேகத்தைத் தூது போகுமாறு கூறுவது.

# ஹார்மோனிய பஹிஷ்காரம்

[ஏ. என். கல்யாணசுந்தரம் எம். ஏ.]

(எல்லா உரிமைகளும் ஆசிரியருடையது)

ஞாயிற்றுக்கிழமை காலை 8½ மணி இருக்கும். வேறு வேலை ஒன்றும் இல்லாததால் ஏதாவது வம்பு அளக்க வெளியே போகத் தயாராக இருந்தேன். ரேடியோ பாடிக்கொண்டிருந்தது. அந்தப் பாட்டுக்குப் பக்க மேளமாக, என் மகன் நடேசன் கடம் வாசித்துக்கொண்டிருந்தான். நடேசனுக்கு வயது ஏழுதானிருக்கும். ஆனால் ஒரு பெரிய ஸங்கீதப் பைத்யம். ரேடியோவில் வாத்ய கோஷ்டி வாசித்ததைக் கேட்டது முதல் வீட்டிலுள்ள அடுக்குகள், வெங்கலப் பானைகள், டம்ளர்கள் முதலியவைகளுக்குச் சனியன் பிடித்தது. அவைகளைத் தன் முன்னால் வைத்துக்கொண்டு ஜலதரங்கம் வாசிக்க ஆரம்பித்துவிடுவான். சல்லடையை கிஞ்சரவாக ஸ்ருஷ்டி செய்தான். தகர டப்பா ம்ருதங்கமாக ரூபமெடுத்தது. ஊதுகுழல் நாதஸ்வரமாக மாறியது. தெருவில் ஒரு அணுவிற்கு விற்கும் கொட்டாங்கச்சி பிடில் ஏழெட்டு, ஒன்று மாற்றி ஒன்று கூக்குரலிடும். இவை போதாது என்று பழைய ஹார்மோனியம் ஒன்றும் உண்டு. அது என் மனைவிக்கு ஸ்ரீதனமாக வந்தது. ஆகையால் அது வீட்டிலேயே பத்திரமாக இருந்தது. இந்த அபஸ்வரக் களஞ்சியம் திடீர் திடீர் என்று கதறும். இதெல்லாம் நடேசனின் சங்கீதக் கச்சேரி. அவனை ஏதாவது சொன்னாலோ, உடனே முகாரி ராகத்தை ஆரம்பித்து விடுவான். என் மனைவி, முகத்தைத் தூக்கிக்கொண்டு ஸத்யாக்ரஹம் செய்ய ஆரம்பித்து விடுவாள். பிறகு சாப்பாடு வாயில் மண். ஏகாதசி உபவாஸமாகி விடும். ஒரு தடவை இதை அனுபவித்த பிறகு நான் நடேசனை ஒன்றுமே சொல்வதில்லை. ஒரு பவுண்டு பஞ்சு வாங்கி வீட்டில் வைத்திருக்கிறேன். நடேசன் கச்சேரி ஆரம்பமானதும், ஒரு அவுன்ஸ் பஞ்சை காதில் திணித்துக்கொண்டு பேசாமல் என் வேலையை கவனிப்பேன்.

ஒரு நாள் ரேடியோவில் கடம் வாசிப்பதைக் கேட்டு விட்டு "அப்பா, கும் கும்னு குடத்துலே ஜலம் ரொப்பராப்லே சத்தம் கேக்கறதே அது என்ன வாத்யம்" என்று நடேசன் கேட்டான். முட்டாள்தனமாக, "அது கடம்" என்று சொல்லி, என் கஷ்ட காலவசமாக கடமென்றால் என்ன என்று விவரமாகச் சொல்லித் தொலைத்தேன். உடனே எனக்குப் பிடித்தது சனியன். "அப்பா கடம் வாசிக்கறதெக் காட்டு, இல்லாட்டா நீ வாசி" என்று பிடுங்க ஆரம்பித்துவிட்டான் நடேசன். "ஸபாவிலே கச்சேரி நடக்கும். அதுலே வாசிப்பா உன்னை அழச்சுண்டுபோய் காட்டறேன்" என்று நான் ஸமாதானப்படுத்தியது பலிக்கவில்லை. விடிந்ததும் "அப்பா கடம்", காப்பி சாப்பிட்டதும் "அப்பா கடம்" மத்யானம் "கடம்", ராத்திரி தூங்கும் பொழுதும் "கடம்" இவ்விதமாக மூன்று நாட்கள் நடேசன் கடம் தவிற வேறொன்றும் பேசவில்லை. என் மனைவிக்குக் கோபம் வந்துவிட்டது. "மூணு நாளா கொழந்தே கடம் கடம்னு அடிச்சுக்கறான். யாராவது கட்டேலெ போறகட வித்வான் ஆத்துக்கு அழச்சுண்டுபோய் கடம் வாசிக்கறதெ காட்டப்படாதா? இதெவிட பெரிசா வேறென்ன வேலெய வெட்டி முறிக்கறேளோ தெரியல்லெ? கவர்னர் வேலெ பாழா போறதாக்கும்" என்று தாரஸ்தாயியில் என் மனைவி ஸமாதானமாகக் கூறினாள். பேசாமல் அங்கவஸ்திரத்தை எடுத்துப் போட்டுக்கொண்டு, நடேசனையும் இழுத்துக்கொண்டு திருவல்லிக்கேணிக்குக் கிளம்பினேன். ஒரு கட வித்வான் வீட்டில் நுழைந்து, அவரிடம் விஷயத்தைச் சொல்லி, ஐந்து ரூபாய் ஸ்வர்ண புஷ்பம் அழுது, அவரைக் கடம் வாசிக்கச்செய்தேன். அதை நடேசன் அரை மணி நேரம் ரொம்பக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்து விட்டு, "அப்பா, போதும்

ஆத்துக்குப் போவோம் வா" என்றான். இரட்டைச் சந்தோஷத்தோடு வீடு திரும்பினேன்.

அன்று சாயங்காலம் ரேடியோவில் "சங்கீத அப்யாஸ" நிகழ்ச்சி ஸமயம் வந்தது. "இப்பொழுது ஸ்ருதியுடன் சேர்ந்து கொள்" என்று ரேடியோ பேசினது. உடனே "கணீர், படார்", என்று ஓசை கேட்டது. ரேடியோ ரிபேர் ஆகிவிட்டதோ என்று அடுத்த அறைக்கு ஓடினேன். அப்படியே திகைத்து நின்று விட்டேன். புதிய பானை ஒன்றை மடியில் வைத்துக்கொண்டு நடேசன் ரேடியோ பாட்டுக்குக் கடம் வாசித்துக்கொண்டிருந்தான். என் மனைவி அதை ஆனந்தமாய்க் கண் கொட்டாது பார்த்துக்கொண்டிருந்தாள். நான் வாய் திறக்காது சிவ சிவா என்று என் அறைக்குத் திரும்பினேன். அன்று முதல் நடேசனுக்குக் கடப் பைத்யம் பிடித்துவிட்டது. அவன் பக்க மேளமில்லாமல் என் வீட்டில் ரேடியோக் கச்சேரி கிடையாது.

வழக்கம்போல் இன்று காலையும் கடக் கச்சேரி நடந்துகொண்டிருந்தது. திடீரென்று "ஐய்யய்யோ, கடம், அப்பா கடம், அம்மா கடம் போய்டுத்தே" என்ற நடேசன் கூக்குரல் கேட்டது. "சரி சனி உடைந்தது" என்று நான் பேசாமலிருந்தேன். "இந்தாங்கோ! உங்களைத்தானே' கொழந்தை கடம் கடம்னு கத்தறது காது லெவிழல்லெ? காது அடச்சா போச்சு? அதெ உடனே என்னன்னு கவனியுங்கோ" என்று ஹோம் கவர்ன்மெண்டு ஜீ.ஓ. போட்டாள். கஷ்டகாலமென்று நடேசனிடம் சென்று "பானை ஒடஞ்சு போச்சா? போனாப் போறது. புதுசா வாங்கித்தரேன்" என்றேன். "கடம் ஒடயெல்லே அப்பா! வெடுக்குன்னு கையிலேந்து பிடுங்கிக்கொண்டு பறந்து போய்டுத்து அப்பா" என்றான் நடேசன். "என்னடா பைத்யம் கியித்யம் பிடிச்சுடுத்தா என்ன? பானையாவது பறக்கிறதாவது" என்று கூறி சுற்றும் முற்றும் பார்த்தேன். பானையைக் காணவில்லை. உடைந்த துண்டுகளும் இல்லை. "இல்லே அப்பா! நிஜம்மா வாச வழியா பறந்து போயிடுத்து" என்று நடேசன் கூறியது என் காதில் விழுந்தது. "இரு, ஓடிப்போய் அதெப் பிடிப் பிடிச்சுண்டு வரேன்" என்று கூறித் தப்பித்துக் கொள்ள வழி அகப்பட்டது என்று ஓட்டமாக வெளியே ஓடினேன். என்ன ஆச்சர்யம்! தெருவில் பானை பறந்து கொண்டிருந்தது. நான் அதைப் பின்பற்றி ஓடினேன். தெருவில் பத்திரிகை விற்கும் பையன்கள் "மாயத்திருட்டு! வித்வான்கள் வீட்டிலுள்ள சங்கீத வாத்யங்கள் மாய மாய் மறைந்த அதிசயம்! பாரதமணி ஒரு அணா" என்று கத்துவது என் காதில் விழுந்தது. சரி விஷயம் என்னவோ ஒரு திநுஸாகத்தான் இருக்கிறது. நமது பானையை விடாமல் பின் தொடர்ந்தால் குட்டு வெளிப்பட்டுவிடும் என்று எண்ணி பானையைப் பின் தொடர்ந்தேன்.

பானை "எல்லியட்ஸ் பீச்சை" நோக்கிப் பறந்துகொண்டிருந்தது. கடற்கரையை நெருங்க நெருங்க ஒரு இனிமையான கோஷம் கேட்டுக்கொண்டு வந்தது. கடற்கரையில் ஒரு பெரிய பந்தல் இருந்தது. சமுத்திர அலையின் கோஷத்தையும் மூழ்கடித்துக்கொண்டு, பந்தலிலிருந்து ஒரு பெருங்கோஷம் கேட்டது. அநேக சங்கீத வாத்யங்களை ஒரே சமயத்தில் வாசிப்பதுபோ லிருந்தது. ஆனால் ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாம லிருந்தது.

பானையும் நானும் பந்தலை அடைந்தோம். பந்தல் வாயிலில் நின்றுகொண்டிருந்தவர்களிடம் பானை ஒரு சீட்டை நீட்டியது. நான் மெதுவாக எட்டிப்பார்த்தேன். "சங்கீத வாத்திய மஹாநாடு" என்பது மாத்திரம் தெரிந்தது. பானையை உள்ளே அனுமதித்தார்கள். நடேசன் அனுக்கிரஹத்தால் பானையும் சங்கீத வாத்யமாக ஆகி விட்டது.

நானும் மெதுவாக உள்ளே நுழையப் பார்த்தேன். ஆனால் பந்தல் வாயிலிலுள்ளவர்கள் என்னைத் தடுத்தார்கள். தைரியத்தைக் கைவிடாமல் "மஹாநாட்டிற்குப் போகவேண்டும்" என்றேன். "சங்கீத வாத்ய மஹாநாட்டில் மனிதருக்கு இடம்

குற்றமில்லாத
தோற்றத்திற்கு
மைசூர் சந்தண சோப்
பைப்போல் நல்லது
வேறொன்றுமில்லை

அதை உபயோகித்தால் சருமம்
வெண்மையாயும் மிருதுவாயும்
ஆகிறது.



MYSORE
Sandal
SOAP
GOVT. SOAP FACTORY, BANGALORE.

HEYCOCK CO.

மைசூர் சந்தண சோப்.

## BOOKS FOR ALL

**Books by Dr. James H. Cousins**

| | Rs. | A. |
|---|---|---|
| The King's Wife (The story of Mira Bai) | 1 | 0 |
| Surya Gita - (Sun songs) | 2 | 0 |
| The Renaissance in India | 2 | 0 |
| New ways in English Literature (Essays on recent and living English Poets.) | 1 | 8 |
| Foot Steps of Freedom | 2 | 0 |

**Books by C. F. Andrews.**

| | | |
|---|---|---|
| Oppression of the Poor | 1 | 0 |
| The Claim for Independence | 0 | 8 |
| Non-Cooperation | 0 | 8 |

**Gandhi Literature**

| | | |
|---|---|---|
| Gandhi and Non-violent Resistance | 3 | 0 |
| Freedom's Battle | 2 | 0 |
| Great thoughts of Makatma Gandhi | 1 | 0 |
| The Wheel of Fortune | 1 | 0 |

**Svetaranya Ashrama Book Shop,**
295, Linghi Chetti Street,
G. T. MADRAS.

## நீங்கள் வாசிக்க!

டாகூர் நூல்கள்

| | | |
|---|---|---|
| குமுதினி (ஸ்ரீமதி ரங்கநாயகி மொழி (பெயர்ப்பு | 1 | 8 |
| மாயா விநோதினி (ஸ்ரீமதி தஞ்சம் மொழி பெயர்ப்பு) | 1 | 8 |
| முருகன் ஓர் உழவன் (கா. சி. வேங்கடரமணி நூல் மொழிபெயர்ப்பாசிரியை "கிருஷ்ண குமாரி") | 1 | 8 |
| இரட்டை மனிதன் (ஸ்டிவென்ஸனின் அற்புதக் கதை மொழிபெயர்ப் பாசிரியர் கு. ப. ராஜகோபாலன்) | 0 | 8 |
| தேய்ந்த கனவு (சார்ல்ஸ் டிக்கன்ஸ் நாவல் மொழி பெயர்ப் பாசிரியர் 'கி.ரா.') | 0 | 8 |
| உலகத்துச் சிறு கதைகள் (புதுமைப் பித்தன் மொழி பெயர்ப்பு) | 1 | 0 |

**ஸ்வேதாரண்ய ஆசிரம புத்தகசாலை,**
295, லிங்க செட்டித் தெரு, சென்னை.

கிடையாது" என்ற பதில் கிடைத்தது. "பாரதமணியின் நிருபர். நடவடிக்கைகளை ரிபோர்ட் செய்ய வந்திருக்கிறேன்" என்றேன். "பத்திரிகைகளுக்கு அழைப்பு அனுப்பவில்லையே" என்று கூறினார்கள். "ஆமாம் நீங்கள் சொல்வது சரிதான். ஆனால் நான் பாரதமணியின் - மணியின் நிருபர் என்பதைக் கவனிக்கவேண்டும்" என்றேன். உடனே "சின்ன மணி! சின்ன மணி" என்று யாரையோ கூப்பிட்டார்கள். சின்ன மணியும் வந்தார். "நமஸ்காரம்" என்று கூறி நான் அவரைக் காக்காய்பிடித்தேன். "சின்னமணி! இதோ பார் உங்கள் அண்ணா செய்த வேலை உங்கள் அண்ணாவின் காரியாலய நிருபராம் இவர்" என்று என்னைச் சுட்டிக் காட்டினார்கள். "தப்பும் தவறுமாய், நாங்கள் சொல்லாதவைகளை எல்லாம் நிருபர்கள் எழுதி விடுவார்கள் என்றுதான் நாங்கள் பத்திரிகைகளுக்கு அழைப்பு அனுப்பவில்லை. உங்களுக்கு மாத்திரம் விஷயம் எப்படி ..." என்று சின்னமணி முடிப்பதற்குள் "ஸத்தியமாக, பாரதமணி பேல் ஆணையாக, நடந்ததை நடந்தபடி நான் சரியாக ரிபோர்ட் செய்கிறேன" என்று நான்வாக்குக்கொடுக்கவே, சின்னமணியின் சிபாரிசின்மேல் நான் உள்ளே நுழைந்தேன்.

உள்ளே சுமார் 10,000 வாத்யங்கள் கூடியிருந்தன. மூலைக்கு மூலைகூடி ஒரே ஸமயத்தில் தத்தம் அபிப்பிராயங்களை ஒலித்துகொண்டிருந்தன. மனிதர்கள் நடத்தும் மஹாநாடுபோலவே இருந்தது. ஆனல மனித மஹாநாட்டுச் சப்தம்போல் இல்லாமல் இந்த மஹாநாட்டுச் சப்தம் கேட்பதற்கு இனிமையாக இருந்தது. சின்னமணி, ஒருமனிதனை மரியாதையாக அழைத்து வருவதைக் கவனித்து சிறிது பேச்சை நிறுத்தி என்னைக் கவனித்து விட்டு மறுபடியும்வாத்தியங்கள் பேசஆரம்பித்தன. மேடைக்கருகிலுள்ளஸோபாவொன்றில் என்னைச் சின்னமணி உட்காரவைத்து விட்டு "அண்ணா அண்ணா?" என்று கூப்பிட்டார். "இதோ வந்தேன" என்று கூறிக்கொண்டே பாரதமணி வந்தார். "அண்ணா தான் மஹாநாட்டின் காரியதரிசி" என்று சின்னமணி கூறினார். பையிலிருந்து பாரதமணியை எடுத்துப் பார்த்தேன். "கவர் பக்கத்தில்" மணியைக் காணவில்லை. நான் திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தேன். அது ஸாக்ஷாத்தாக எதிரில் நின்றுகொண்டிருந்தது. நான் "நமஸ்காரம்" என்றேன். அவரும் கும்பிட்டுவிட்டு "ஸரி உங்களுக்கு விஷயம் எட்டிவிட்டதா? ஆனால்..." என்று முடிப்பதற்குள் எங்களை அநேகர் சூழ்ந்துகொண்டார்கள். ஒரு மனிதனுக்குக் காரியதரிசி மதிப்புக்கொடுப்பதென்ற விஷயம் ஏதாவது இருக்க வேண்டாமா? ஒரு அழகான பெண்மணி ஒய்யாரமாக நடந்துவந்தாள். அவள் நடையே என்னைக் கவர்ந்தது. யாவரும் விலகிவிட்டார்கள். "இவர்தான் குமாரி முரளீ. இவர் பாரத மணி நிருபர்" என்று அண்ணாமணி எங்களை அறிமுகப்படுத்தினார். குமாரி என்னை நோக்கிப் புன் சிரிப்புடன், இனிமையான குரலில் "நமஸ்காரம்" என்றார். அதைக் கேட்டதும் "நான், என்னையே இழந்தேன். இசையில் கலந்தேன்" குமாரி முரளீயைப் பற்றி ஒரு பக்கம் எழுதுவது என்று தீர்மானித்தேன். அதற்குள் எதிர் பக்கமிருந்து "மணி" என்று கூப்பிட்டுக்கொண்டே ஒரு அம்மை கம்பீரமாக நடந்துவந்தாள். "வீணாதேவி" என்று அவரை அண்ணாமணி அறிமுகப்படுத்த,நான் நமஸ்கரித்தேன். கம்பீரமான குரலில் "என்னப்பா சௌக்யமா?" என்று வீணாதேவி கேட்டார். "சரி இவருக்கும் ஒரு பக்கம்" என்று தீர்மானித்தேன். இப்படியே ஒவ்வொருவராக அறிமுகமாகி வந்தால், ஒவ்வொருவருக்கும், ஒரு பக்கம் ஒரு பக்கம் என்று தீர்மானித்திருப்பேனே என்னவோ. ஆனல் அதற்கு இடமில்லாமல் "அண்ணா, மணி 9 ஆகிறது" என்று சின்ன மணி கூற, அண்ணாமணி மேடைமீது ஏறி "டணார், டணார்" என்று மும்முறை மணி அடித்தார். எல்லோரும் வந்து ஆஸனத்தில் அமர்ந்தார்கள். என் இடதுபுறம் குமாரி முரளீயும், என் வலதுபுறம் வீணாதேவியும் உட்கார்ந்தார்கள். ஏதோ ஸ்வர்க்க லோகத்தில் இருப்பதுபோல் எனக்குத் தோன்றியது.

எங்கும் நிச்சப்தம் குடிகொண்டிருந்தது. கிழவர் தம்பூர், வயது சென்றிருந்

தும், சிறிதும் தடுமாட்டமின்றி மேடை மீது ஏறி நின்றார். வாத்தியங்கள் கோஷித்தன. மற்றொரு தம்பூரின் இனிமையான ச்ருதியுடன், தம்பூர் ஆழ்ந்த குரலில் பேச ஆரம்பித்தார்.

தம்பூர் :—ஓங்கார ப்ரணவத்தைப் புகழ்ந்து துதித்த தேவர்களின் யாழ்குழல் நிகர்த்த இன்னிசைத்துதி கீதத்திலிருந்து நம் உலகு உண்டாயிற்று. ஆனால் பரமன் மேல் எல்லை இல்லாப் பகைகொண்ட பேய் இன்னிசை நாதப்ரணவத்தைக் குலைக்க அபஸ்வரக்களஞ்சியமான ஹார்மோனியத்தைக் கண்டுபிடித்து உண்டாக்கிற்று. இந்த இன்னிசைக் கொலைஞனை நம் இடையிலிருந்து அகற்றுவதைத் தீர்மானித்து முடிவு செய்ய நாம் இங்குக் கூடியிருக்கிறோம். ஆனால் அவ்விதம் செய்யுமுன், தன் சார்பில் சொல்லிக்கொள்ள வேண்டியதைக் கூறப் பேயின் வாத்தியத்திற்கும் இடங்கொடுப்போம்.


வாத்யங்கள் கோஷித்தன. தம்பூர் மேடையிலிருந்து இறங்க ஸ்ரீமான் பிடில், மற்றொரு பிடில், ‘ ஆரபி ’ ராகம் வாசிக்கப் பேசுகிறார்.

பிடில் :—சபையோர்களே ! இச்சபைகுத் தலைமை வகிக்கும்படி ஸ்ரீமதி வீணா தேவியவர்களை வேண்டிக்கொள்கிறேன்.

ம்ருதங்கம் :—நானிதை என் முழு ஆவர்த்தனத்துடனாமோதிக்கிறேன் (ரூபக தாளத் தீர்மானம் வாசிக்கிறார்)

[வாத்யங்கள் அனைத்தும் ஒலிக்கின்றன. சப்தம் அடங்குகிறது. வீணாதேவி கம்பீரமாக மேடைமீது ஏறி கனைத்து (தாளத் தந்திகள்மீட்டப்படுகின்றன) மற்றொரு வீணை "ஸ்வரராக ஸுதாரஸ" என்ற சங்கராபரணப்பாட்டு வாசிக்கப்பேசுகிறார்] (தொடரும்)

---


FOR

**BLOCKS**

of all Varieties

**POPULAR PROCESS**

132, BROADWAY,

Mannady P.O., G. T., Madras.

# கொடூர தண்டனை

[சு. ரா. ஆதிமூலம், திருவல்லிக்கேணி]

இடம் :—அரண்மனையில் ஒரு அறை.

பாத்திரம் :—ஹியூபர்த், ஆர்தர், வேலையாட்கள்.

[ஜான் (1199—1216 கி. பி.) என்ற ஆங்கில மன்னன் தன் தமையன் புதல்வனை ஆர்தரைக் கண்ணைக் குருடாக்கும்படி ஹியூபர்த் என்ற தன் வேலையாளுக்கு உத்தரவு இடுகிறான். ஏனெனில் அரசுரிமை ஜானைவிட ஆர்தருக்குத்தான் அதிகமிருந்தது.]

ஹியூபர்த் :—அடே, சேவகர்களா, இதோ இருக்கும் இருப்புக் கம்பிகளைப் பழுக்கக் காய்ச்சுங்கள்; பிறகு இத் திரை மறைவில் இருங்கள், நான் தரையைத் தட்டினதும் வெளி வந்து என்னுடன் இருக்கும் சிறுவனை அக் கட்டிலோடு பிணைத்துக் கட்டுங்கள்; ஜாக்கிரதை; செல்லுங்கள்.

(வேலைக்காரர்கள் திரைக்குள் மறைகிறார்கள்)
(ஹியூபர்த் ஆர்தரைக் கூப்பிடுகிறான். ஆர்தர் வருகிறான்)

ஆர்தர் :—ஹியூபர்த், வந்தனம்.

ஹியூ :—வந்தனம், அரசிளங்குமாரா!

ஆர்தர் :—அரசிளங்குமாரன் என்ற பெரிய பெயரைத் தவிர வேறு ஒன்றுமில்லை. ஏன் உன் முகம் பொலிவிழந்திருக்கிறது?

ஹியூபர்த் :—மெய்தான்; நான் களிப்பாய் இருந்த நாட்கள் பறந்துவிட்டன.

ஆர்தர் :—என்னை ஒழிய வேறு ஒருவரும் துக்கமாய் இருக்கவேண்டிய அவசியமில்லை என்று என் மனதிற் படுகிறது. நான் பிரான்சிலிருக்கும்பொழுது சில கனவான்கள் வேண்டுமென்றே வருத்தமாய் இருந்தார்கள்; அது இப்பொழுது என் ஞாபகத்துக்கு வருகிறது. கடவுள்மேல் ஆணையாகச் சொல்லுகிறேன், நான்மட்டும் ஜெயிலில்லாமல், வெளியே ஆடு மேய்க்கினும், சந்தோஷமாயிருப்பேன். என் சிற்றப்பா, எனக்குத் தீங்கு இழைக்காமலிருப்பார் என்ற ஐயமில்லாவிடில், இங்கும் சந்தோஷமாகவே இருப்பேன். அவர் எனக்கு அஞ்சுகிறார்; நான் அவருக்குப் பயப்படுகிறேன். வியாபரி மகனாகப் பிறந்தது என் குற்றமா? இல்லை மெய்யாகவே, அது இல்லை; கடவுள் மேல் ஆணையாக நான் உன் மகனாயிருந்தால், ஹியூபர்த், என்னை நீ நேசிப்பாயல்லவா?

ஹியூபர்த் :—(தனக்குள்) நான் அவனிடம் பேச்சுக் கொடுத்துக் கொண்டிருந்தால், என்னிடம் இறந்து கிடக்கும் இரக்கத்தை எழுப்பி விடுவான்; ஆதலால் நான் சீக்கிரம் காரியத்தை முடிக்க வேண்டும்.

ஆர்தர் :—ஹியூபர்த், உனக்கு உடம்புக்கு என்ன? இன்று உன் முகம் வெளுப்பாயிருக்கிறது. உண்மையில் நீ நோயாயிருக்க விரும்புகிறேன். ஏனென்றால் இரவு முழுவதும், உன்னண்டை அமர்ந்து உனக்கு ஆறுதலளிப்பேன். நீ என்னை நேசிக்கிறதற்குப் பன்மடங்கு அதிகமாய் உன்னை நான் நேசிக்கிறேன் என்பதை ஞாபகம் வைத்துக் கொள்.

ஹியூபர்த் :—(தனக்குள்) அவன் வார்த்தைகள் என் இதயத்தை உருக்கி விடுகின்றனவே! (ஒரு கடிதத்தைக் காண்பித்து) இதை வாசி, ஆர்தர். (தனக்குள்) என்ன முட்டாள் தனமான கண்ணீர்! இரக்க மில்லா அத்தண்டனையைச் செய்யவிடாது வீட்டை விட்டு வெளியே தள்ளுவது போலிருக்கிறதே. நான் சுருக்காய் முடிக்கவேண்டும்; அல்லது என் காரியம் கோழைத்தனமான பெண் கண்ணீராக மாறி, மோசமாய் விடும். ஆர்தர், அதை உன்னால் வாசிக்க முடியவில்லையா? நன்றாக எழுத்துக்கள் எழுதப்படவில்லையா?

ஆர்தர் :—ஹியுபர்த், ஒரு தீய காரியம் செய்ய, எழுத்துக்கள் நல்லதாகவே உள. பழுக்கக் காய்ச்சிய இருப்புக் கம்பியால் என்னிரு கண்களையும் குத்தி, குருடாக்கப் போகிறுயா?

ஹியூ :—இளைஞ! அப்படியே நான்செய்ய வேண்டும்.

ஆர்தர் :—செய்யப் போகிறுயா?

ஹியூ :—ஆம். செய்யப்போகிறேன்.

ஆர்தர் :—உனக்கு மனம் வருகிறதா? ஒரு தடவை உனக்குத் தலைவலி ஏற்பட்ட பொழுது என் அருமையான கைக் குட்டையை—என் ஆருயிர்க் காதலி ஒருத்தி, பின்னிய குட்டையைக் கொண்டு உன் தலையைச் சுற்றிக் கட்ட வில்லையா? அவ்வழகிய சவுக்கத்தை மீண்டும் உன்னிடம் கேட்டேனு? என் கைகளால் உன் தலையைத் தாங்கி இரவு முழுவதும் உன்னைக் கவனித்துக் கொண்டிருக்க விலலையா? உனக்கு வலி அதிகமா யிருக்கும் பொழுது உன்னைத் தேற்றி, "உனக்கு என்ன வேண்டும்? எங்கு வலி அதிகமா யிருக்கிறது?" என்று சொல்ல வில்லையா? எத்தனையோ, ஏழைச் சிறுவர்கள் உன் துயரங்கண்டு, ஒரு ஆறுதல் மொழிகூடச் சொல்லாமல் போயிருப்பார்கள்! ஆனல் உன் சிறு நோய்க்கு வைத்தியம் பார்க்க ஒரு அரசிளங் குமரன் வாய்த்தான். நீ, என் அன்பை தந்திர அன்பு என்று நினைக்கலாம். கடவுள் என்னைத் துன்பப் படுத்துவதில் உவகை கொள்ளின், நீ அதைச் செய்யலாம். என் கண்களைக் குத்துவாயா? இக்கண்கள் — உன்னை இதுவரை கோபமாய்ப் பார்க்காத கண்கள் — இனிமேலும் பாராத கண்கள்!

ஹியூபர்த்:—அதைச் செய்ய நான் உறுதி கொண்டு விட்டேன். செக்கச் சிவந்த கம்பிகளால் உன் கண்களைப் பொசுக்கவே வேண்டும்!

ஆர்தர்:—ஆ, இப்போல்லா நாளிலும் ஒருவரும் துணியாரே! அவ்விரும்புக் கம்பிகள், அனலாயிருந்தாலும், என் கண்ணீரை உறிஞ்சி, கோபந்தணிந்து என் மேல் இரக்கம் கொள்ளுமே! பிறகு தான் அக் கொடுஞ்செயல் செய்ய முன் வந்ததற்கு வருந்தி, துருப்பிடித்துப் பொடியாகிவிடுமே! அவ்விரும்புத் தடிகளை விட உன் மனம் இரும்பா? ஒரு தேவதூதன் என்முன் தோன்றி, "ஹியூபர்த் உன் கண்களை எரிக்கப் போகிறுன்" என்று சொன்னலும் அவன் நாவை நம்புவேனு? மாட்டேன். உன் நாவைத் தவிர ஒருவரையும் நம்பேனே.

ஹியூபர்த்:—(தரையைத் தட்டுகிறுன்) டே, கொலையாளிகளா, வாருங்கள்.

(அவர்கள் கயிறு, பழுக்கக் காய்ச்சின இருப்புக் கம்பிகளுடன் வருகிறுர்கள்.)

ஹியூபர்த்:—(அவர்களை) நான் சொன்னது போல் செய்யுங்கள்.

ஆர்தர்:—ஐயோ, என்னைக் காப்பாற்று, ஹியூபர்த், என்னைக் காப்பாற்று. இக் கொடியவர்களைக் கண்ணுற்றதுமே என் கண்கள் வெளியே வந்துவிடும் போலிருக்கிறதே!

ஹியூபர்த்:—(கொலையாளிகளை) அவ்விரும்பை என்னிடம் தந்துவிட்டு, அவனைக் கட்டுங்கள் அங்நாற்காலியுடன்.

ஆர்தர்:—ஐயோ, உன்னை இவ்வளவு கொடூரமாக்கியது யார்? நான் உதற மாட்டேன்; சிலைபோல நிற்கிறேன். கடவுள்மேல் ஆணை, ஹியூபர்த். என்னைக் கட்டச் சொல்லாதே! நான் சொல்வதைக்கேள், ஹியூபர்த், இம்மனிதர்களை வெளியே விரட்டு; நான் மௌனமாயிருக்கிறேன். நான் துள்ளேன்; உதறேன்; ஒரு மொழியும் புகலேன். இரும்புக் கம்பிகளைக் கோபித்துப் பார்க்கேன்; இம் மனிதர்களைப் போகச்சொல். எனக்கு என்ன தண்டனை செய்யினும் நான் உன்னை மன்னிப்பேன்.

ஹியூபர்த்:—(கொலையாளிகளை) சரி, நீங்கள் செல்லுங்கள். நான் தனியே காரியத்தைச் செய்கிறேன்.

அவர்களிலொரு கொலையாளி:—இக் கொடிய காரியத்தினின்றும் தப்பினது

எனக்குப் பரம திருப்தியை யளிக்கிறது.

(கொலையாளிகள் போகிறார்கள்)

ஆர்தர் :—ஐயோ, பாவி, அவனையும் போகும்படி செய்தேனே! அவன் பார்வை கொடியதா யிருக்கிறது; மனது இரக்கச்சித்தி உள்ளதாயிருக்கிறது. அவனைமட்டும் வரச் சொல்லுங்கள், அவனைப் பார்த்தாவது ஹியூபர்த் மனம் மாறாதா?

ஹியூபர்த் :—ஆர்தர், தயாராயிரு.

ஆர்தர் :—வேறு வழியில்லையா?

ஹியூபர்த் :—கண்களை யிழப்பதைத் தவிர, வேறு வழி இல்லை.

ஆர்தர் :—ஆ! கடவுளே! ஒரு துரும்பு,—ஒரு தூசி—ஒரு மயிர் உன் கண்களி லிருக்கலாகாதா? ஏதாவது ஒரு தொந்தரவு அவ்வுயர்ந்த வுறுப்பி லிருக்கலாகாதா? அப்படி மட்டும் இருந்தால், "ஐயோ, இச்சிறு வஸ்துக்கள் இவ்வளவு வலியும் தொந்தரவும் கொடுத்தால், நான் செய்யப் போகும் கொடிய காரியம் எப்படி இருக்கும்?" என்று அறிவாயல்லவா?

ஹியூபர்த் :—இதுதானா உன் வாக்குறுதி? எங்கே, உன் நாக்கை நீட்டு.

ஆர்தர் :—என் கண்களைக் காப்பாற்ற என் நாக்குத்தான் இருக்கின்றது. என்னை நாக்கை நீட்டச் சொல்லாதே — சொல்லாதே. ஹியூபர்த், இல்லை; ஹியூபர்த், பிரியமிருந்தால் என் நாக்கை வெட்டி விடு. அதனால் என் கண்கள் துயருறா; என் கண்களைக் காப்பாற்று. ஒரு உபயோகத்திற்கு உதவாவிடினும். உன்னை யாவது பார்க்குமல்லவா? போ, அக் கம்பிகள் குளிர்ந்துவிட்டன! என்னை ஒன்றும் செய்யா, அவை.

ஹியூபர்த் :—சிறுவா, திரும்பவும் காய்ச்சுவேன்.

ஆர்தர் :—இல்லை. உண்மையாக முடியாது. மனிதனின் நன்மைக்காக இறைவனால் உண்டாக்கப்பட்ட நெருப்பானது, தீயச் செயல்களில் பயன்படுகிறதை யறிந்து வருந்தி அணைந்து விட்டது.

ஹியூபர்த் :—என்னால் மீண்டும் தீப்பற்ற வைக்க முடியும்; பையா!

ஆர்தர் :—அப்படிச் செய்யின், உன்னுடைய தீயச் செயல்களைக்கண்டு கோபிப்பது மாதிரி மினுமினுத்து உன் மேல், ஹியூபர்த், சாம்பலை வீசும். எதுபோலெனில ஒரு நாயை அதன் எஜமானன் மாறி மாறி சண்டை போடச் செய்தால், அது சினந்து எஜமானனையே கடித்துவிடும். அதுபோல் என் கண்களைக்கெடுக்கவே உபயோகிக்கும் வஸ்துக்கள் வேலை செய்ய மறுக்கின்றன. இரக்கமிலா இரும்பும் நெருப்பும்கூட இரங்குகின்றன. ஆனால், நீ மட்டும் பிடிவாதமா யிருக்கிறாய்?

ஹியூபர்த் :—சரி, உன் சிற்றப்பாவின் சொத்து முழுவதும் எனக்குக் கொடுக்கினும் நான் உன் கண்களைத் தொடேன். நான் அவைகளை (சொத்துக்களை) இதே இருப்புக் கம்பியாலேயே நசுக்கிவிட உறுதி கொண்டுவிட்டேன்.

ஆர்தர்:—(சந்தோஷத்துடன்) ஹியூபர்த். இப்பொழுதுதான் பழைய ஹியூபர்த். இவ்வளவு நேரமும் வேஷம் பூண்ட ஹியூபர்த்தா யிருந்தாய்.

ஹியூபர்த் :—சத்தம் செய்யாதே இனி மேல். உன் சிற்றப்பாவுக்கு நீ இறந்துவிட்டாய் எனத் தெரியவேண்டும். ஆகையால் இக்கொலையாளிகளிடம் உன்னைக் கொன்றுவிட்டது என்று சொல்லி விடுகிறேன். அரசிளங்குமரா, சந்தேகமின்றி நன்றாகத் தூங்கு. ஹியூபர்த் இவ்வுலகிலுள்ள ஐசுவரிய முழுவதும் அளிக்கினும் உன்னைத் தொடான் என்று அறிந்துகொள்.

ஆர்தர் :—இறைவா! ஹியூபர்த், உன்னை மனமார வாழ்த்துகிறேன்.

ஹியூபர்த் :—சத்தம் செய்யாதே! என்னைப் பின்பற்றி வா. உனக்காக நான் மிகப் பெரிய ஆபத்தில் இருக்கிறேன்.

(ஆர்தர், இதில் தப்பித்தான். ஆனால் அரண்மனையிலிருந்து தப்பி வெளிவர எண்ணி ஒரு இரவில் முயற்சிக்கும் பொழுது மாடியிலிருந்து கீழ்விழுந்து இறந்தான்)

(இது ஷேக்ஸ்பியர் எழுதிய 'King John' என்ற நாடகத்திலிருந்த ஒரு இயலை மொழிபெயர்த்தது.)




## மாமா தாதாவின் மடித்தலைகாணி

[பார்வதி. சுப்ரமணியம், மங்களூர்.]

குழந்தைகளே உங்களுக்கு மடி விழுப்பு இதைப்பற்றி அதிகம் தெரிந்திருக்காது. ஏனென்றால் நீங்கள் பிறந்திருக்கிற இந்த நாளில் நான் குழந்தையா யிருந்தபோது கொண்டாடின அவ்வளவு மடி, விழுப்பு, எச்சில், தீட்டு இவைகள் கொண்டாடப்படுவது இல்லை. இப்பொழுதெல்லாம் அநேகமாக உங்களுக்கு மடித்து வைக்கப்பட்டது மடியாகும். நீங்கள் விழுத்து அல்லது அவிழ்த்து எடுத்தது விழுப்பு, அழுக்காகும்.

அப்பாடியோ !! நாங்கள் குழந்தையா யிருந்தபோது பட்ட பாடு எழுத முடியாது. வீட்டில் அனேகமாய் எல்லாப் பெரியோரும் மடியாயிருப்பவர்கள்தான். அவர்கள் காலையில் எழுந்து காலைக்கடனை முடித்து ஸ்நானம்செய்துவிட்டு ஆற்றில் குளத்தில் தாங்களே தாங்கள் உடுத்தியிருக்கும் உடுப்புகளைத் தோய்த்து அந்த ஈரத் துணியையே உடுத்திக்கொண்டு வீடுவந்து சேருவார்கள். வீட்டில் முதல் நாளே உயர மூங்கிலில் உலரப் போடப்பட்டிருக்கும் உடுப்பை எடுத்துத் தாங்கள் உடுத்தி வந்திருக்கும் ஈர வஸ்திரங்களைக் களைந்து காய்ந்த வஸ்திரங்களை உடுத்திக்கொண்டு துவைத்துவந்த துணிகளை மறுநாள் உடுத்திக்கொள்ளத் தயாராய் இருக்கும்படிக் காயப்போடுவார்கள். அந்த நாளில் ஒருவருக்கு ஒரு வருஷத்துக்கு இரண்டு ஜோடி வேஷ்டி தான் வாங்குவார்கள். ஆபத்து சம்பத்துக்கு உதவ ஒரு ஜோடி உள்ளே புதிதாக வைத்திருப்பார்கள். ஸ்திரீக்கும் 'உடு புடவை' இரண்டு தான் திட்டம். ஏதாவது விசேஷங்களுக்கு வேண்டி உதவவும், தினசரிக்கு உள்ள மாற்று உடுப்புரிப்பினால் உலராமல் போனாலோ, ஏதாவது அசந்தர்ப்பத்தால் விழுப்புப் பட்டுப் போனாலோ உதவுவதற்குத் தான் மூன்றாம் புடவை. இந்த நாளில் உங்களுக்கு இருப்பது போல் டஜன் கணக்கில் சட்டை, பனியன், ஷார்ட், பான்ட் என்றெல்லாம் அந்த நாளில் கிடையாது. வண்ணானுக்குப் போடுவது என்பதும் அதிகம் கிடையாது. உடுப்புகளை அவரவர்களே துவைத்து உடுத்திவந்ததால் கொஞ்சம் பழுப்பேறி இருக்குமே ஒழிய அவைகள் சுத்தமாகவே யிருக்கும். ரொம்ப அழுக்கேறி விட்டதாகத் தோன்றும்போதோ அல்லது சாவு, தீட்டு இவைகள் நேர்ந்தாலோதான் வீட்டிலுள்ள உடுப்புகளை வண்ணானுக்குப் போடுவார்கள். வண்ணான் கூலியும் தற்போது மாதிரி உடுப்புக்கு ஒரு அணா, அவசரசலவைக்கு அரைக்கால் ரூபா என்றெல்லாம்

ரேட் கிடையாது. கிராமத்துக்கு ஒரு வண்ணான் குடும்பத்தை அமர்த்தி அவனுக்குக் கிராமத்தார் எல்லாரும் அவரவர்கள் விளைச்சலில் நெல்லாக அளந்து கொடுப்பார்கள். அவனும் யார் வீட்டு வேலையானாலும் சாக்குப் போக்கு சொல்லாமல் வெளுத்துக் கொடுப்பான்.

வீட்டில் பெரியவர்கள் குளித்துக் காய்ந்த உடுப்புகள் உடுத்திக் கொண்டுவிட்டால் பிறகு இரவு படுக்கும்மட்டும் அசுத்தமான வஸ்துக்கள் துணிமணிகள் ஒன்றையும் தொடமாட்டார்கள். தற்காலத்தைப்போல் எப்பொழுதும் படுக்கை விரித்து வைத்த வண்ணம் இருக்காது. கடவுள், இரவுதான் மனிதர்கள் படுத்து உரங்கி இளைப்பாறுவதற்காக ஏற்படுத்தியிருக்கிறார் என்று எண்ணமுள்ளவர்கள் அக்காலத்தார். இரவில் படுக்கும் நேரங்களில் தவிர பாக்கி நேரங்களில் படுக்கையைத் தீண்டினாலே தீட்டு என்று வைத்திருந்தார்கள். சற்று வயதானவர்களுக்குப் பகலில் சாப்பாடான பிறகு களைப்பாற வேண்டி படுத்துக்கொள்ளவேணும் போல் இருந்தால் தலைக்கு அணைக்கு இரவில் உபயோகிக்கும் தலைகாணியை உபயோகிக்கமாட்டார்கள். ஏனென்றால் அது மடிக்குறைவு, விழுப்பு ஆகும். ஆக பகலில் இளைப்பாற தலைக்கு உபயோகிக்க ஒரு மரக்கட்டையைச் சீவி இழைத்து வைத்துக் கொண்டிருப்பார்கள். அதற்கு தலை உயரக் கட்டை என்றே பெயர். அதைக் கொச்சையாக 'தலக்கோசரக் கட்டை' என்று சொல்லுவார்கள்.

இப்பொழுது மடி என்பதைப் பற்றி உங்களுக்கு விளக்கமாகச் சொல்லிவிட்டேன். அடுத்த வாரமுத்தில் எங்கள் பாட்டியின் மடித் தலைகாணி கதையைச் சொல்லுகிறேன்.


நோட்டீசு

ஈரோடு டி. மு. கோர்ட்டு.

O. P. No. 27 of 40.

பவானி தாலூகா ஒடத்துறை கிராமம் கப்பாவிலிருக்கும் சின்னகவுண்டன் பெண்சாதி காமாட்சி அம்மாள் } மனுதாரி

ஷை தாலூகா கவுந்தப்பாடி கிராமம் பூலுவபட்டியிலிருக்கும் கொளந்தா கவுண்டன் மகன் சின்னப்ப கவுண்டன் 1 ஷையூர் கருப்பண கவுண்டன் பெண்சாதி அம்மணி அம்மாள் 3

ஷையூர் வீரப்பகவுண்டன் மகன் மைனர் பாப்பான் கார்டியன் நஞ்சப்ப கவுண்டன் 4. } எதிர் மனுதாரர்கள்

ஷை மனுவில் மனுதாரி தன் புருஷன் இறந்துபோன சின்ன கவுண்டனுக்கு பூலுவபட்டி சின்னப்ப கவுண்டன் மகன் நஞ்சப்ப கவுண்டன் 4-7-39உயில் ரூபாய் 50க்கு எழுதிக் கொடுத்திருக்கும் பாண்டு தொகையை வசூலிக்க வார்சு சர்டிபிகேட் கோரியிருப்பதால் ஷை மனு 7-6-40யில் வாய்தா எற்பட்டிருக்கும் சங்கதி இதன் மூல்யம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஈரோடு 5-40 } E. S. Ganapathy Ayyar,, மனுதாரி வக்கீல்


## குழந்தைகளுக்கு

பதினைந்து வயதிற்குட்பட்ட குழந்தைகள் எழுதிய கட்டுரை கதைகளைப் பிரசுரிக்க பாரதமணியில் ஒரு பக்கம் விடப்பட்டிருக்கிறது. குழந்தைகளுக்கு எழுதுவதில் பயிற்சி அளிக்கவேதான் இத் தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறது. எனவே குழந்தைகள் அனைவரும் பாரதமணியின் பக்கங்களை தங்களுக்கு உபயோகப்படுத்திக் கொள்வார்கள் என்று நம்புகிறோம். அவர்கள் எழுதியனுப்பும் கட்டுரைகள் கதைகளை ஆவலுடன் வரவேற்கிறோம்.

ஆசிரியர்

# ஸ்வேதாரண்ய ஆசிரம பால பாடம் (2)

[கா. சி. வேங்கடரமணி]

## பாடம் 7

சென்றவாரம் குறிப்பிட்டபடி இந்த வாரம் சிருஷ்டியில் உள்ள நேச ஜாதிகளைச் சேர்த்து அவைகளைப்பற்றி ஆராய்ச்சி செய்யலாம் என்று ஆரம்பித்தேன்.

ரயிலிலும் ஜட்கா வண்டிகளிலும் காவேரிக் கரையிலும் திண்ணையிலும் வெகு நேரம் உட்கார்ந்துகொண்டு சிருஷ்டியில் நேச ஜாதிகள் என்ன என்ன வென்று ஆலோசனை செய்தேன். உண்மையில் நேச ஜாதிகள் எவை என்று எனக்குத் தெளிவாகத் தெரியவில்லை. சிருஷ்டியிலே நேச ஜாதிகளே இல்லையா என்று ஆச்சர்யப்பட்டேன்.

பகைதான் சிருஷ்டியின் பயனு?

பாம்புக்கும் தேளுக்கும் நேச ஜாதி என்ன?<br>
ஆட்டிற்கும் மாட்டிற்கும் நேச ஜாதி என்ன?<br>
மானுக்கும் ஜிராபுக்கும் நேச ஜாதி என்ன?<br>
கரடிக்கும் குரங்குக்கும் நேச ஜாதி என்ன?

மனிதனுக்கு அடிமைகள் பல உள. ஆனல் நேசஜாதி என்ன? மானிடப் பிறப்பு உத்தமப் பிறப்புதான். ஆனல் ஒருவருக்கு ஒருவருக்குள்ளே கொடிய பகையும் நிற்கிறதே!

நான் சேர்த்துஇருக்கும் மேல்கண்ட ஜோடிகளுக்குள்ள இன்னும் நெருங்கிய ஒற்றுமையும் நேசமும் இயற்கையில் கிடையாதா என்று வியந்தேன். நேச மென்றால் ஒன்றால் மற்றென்றுக்கு உதவி வேண்டாமா?

இயற்கையில் இப்படி பிரிந்து நிற்கும் தன்மையை மாற்றி உண்மையில் நேசம் போற்றவேண்டிய அருளை நாம் ஈசனிடம் பெறவேண்டாமா? அப்பொழுதுதான் மோக்ஷம். புதிய நேச ஜாதியும் பிறக்கும். அடிமைத் தனமும் போய் நேசமும் அருளும் பெருகும்.

நாம் இப்பொழுது நம் மனக் குழப்பத்தில் கிருஷ்ண பகவானை வேண்டி ஈசன் அருளைப் பெறுவோம். அருள் அன்னியில் கல்விச் சிறப்பேது?